24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 173 வைகாசி 06ஆம் நாள் திங்கட்கிழமை 20 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## இலங்கையின் இறுதிப் போரில் போர்க்குற்றம் நடக்கவேயில்லை


### மீண்டும் கூறுகிறார் மகிந்த

கொழும்பு, மே 20
இறுதிப் போரின்போது போர்க் குற்றம் நடைபெறவில்லை என்பதை போர் வெற்றியின் 10ஆவது ஆண்டு பூர்த்தியில் நான் பகிரங்கமாகக் கூற விரும்புகின்றேன். மேற்குலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் போர்ச்சட்டங்களுக்கு அமைய, இலங்கையில் எந்தவொரு போர்க் குற்றமும் இடம்பெறவில்லை என்பதை நான் மீண்டும் கூறுகின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
விஜேராமவிலுள்ள தமது உத்தியோகபூர்வ இல்லத்திலி 21

### பாதிக்கப்பட்டோர் நம்பும்

## பொறுப்புக் கூறல் பொறிமுறை நடைமுறைப்படுத்த வேண்டும்

### இலங்கை அரசிடம் வலியுறுத்துகிறார் கனேடியத் தலைமை அமைச்சர்



கொழும்பு, மே 20
பாதிக்கப்பட்டவர்களால் நம்பக்கூடிய வகையிலான பொறுப்புக் கூறல் பொறிமுறைமை ஒன்றை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். பன்னாட்டு மற்றும் உள்நாட்டு ரீதியில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இந்த பொறுப்புக் கூறல் பொறிமுறைமை அமையப் பெற வேண்டும். இவ்வாறு கனேடிய தலைமை அமைச்சர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவித்துள்ளார். 21

### பட்டதாரிகளுக்கான நியமனம் அமைச்சரவைப் பத்திரம் தயார்

யாழ்ப்பாணம், மே 20
20 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு இரண்டாம் கட்ட நியமனம் வழங்குவதற்கு அனுமதிகோரி அமைச்ச 04

### ரிசாத்துக்கு எதிரான தீர்மானம்: நாடாளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் சேர்ப்பு

*நாளை விவாதத்துக்கான திகதி நிர்ணயம்*

கொழும்பு, மே 20
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான 04

### சட்டம், ஒழுங்கு அமைச்சை பொன்சேகாவிடம் வழங்குக!

#### மைத்திரியிடம் வழங்கப்பட்டது 98 எம்.பிக்களின் கையொப்பம்

கொழும்பு, மே 20
ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை சட்டம், ஒழுங்கு 04

### இந்திய ராணுவத்தால் அழிக்க முடியாத புலிகளை எங்கள் இராணுவம் அழித்தது

மார்தட்டுகிறார் மைத்திரி

கொழும்பு, மே 20
இந்திய இராணுவத்தால் கூட விடுதலைப் புலிகளை தோல்வியடையச் செய்ய முடியாமல் 21

### அரசுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 20
தலைமை அமைச்சர் ரணில் தலைமையிலான அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி 04

### இலங்கையில் சைபர் தாக்குதல்

கொழும்பு, மே 20
இலங்கையிலுள்ள குவைத் தூதரகத்தின் இணையத்தளம் உள்ளிட்ட நாட்டின் 10 இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல் 21

### இறுதிப்போரில் உயிர்நீத்த படையினருக்கு அஞ்சலி

கிளிநொச்சிப் பள்ளிவாசலில் நேற்று நடந்தது

கிளிநொச்சி, மே 20
2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் உயிரிழந்த படையினருக்கு கிளிநொச்சியிலுள்ள பள்ளிவாசலில் நேற்று மாலை அஞ்சலி செலுத்தப்பட்டது. முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டு மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தி வழிபாடு செய்தனர். (ஓ.5,35)



### தொடருந்து விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் கோண்டாவில் தொடருந்து நிலையத்துக்கு அண்மையாக, தொடருந்துடன்மோதுண்டு உயிரிழந்த ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ். சகாயநேசன் (வயது-43) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இரவுத் தொடருந்து வந்து 21

### நாடாளுமன்ற ஊழியர் கைது

*தடைசெய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராம்*

கொழும்பு, மே 20
தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் நாடாளுமன்ற ஊழியர் 21

### அதிவேகத்தால் ஒருவர் சாவு

மண்டைதீவில் சம்பவம்


21

### நீர்கொழும்பிலிருந்த வெளிநாட்டு ஏதிலிகள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்


யாழ்ப்பாணம், மே 20
நீர்கொழும்பிலிருந்துவெளியேற்றப்பட்ட வெளிநாட்டு ஏதிலிகள் வவுனியாவைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கும் அழைத்து வரப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் ஓர் வீட்டில் அவர்கள் 21

### குண்டுத்தாக்குதலால் இஸ்லாமியரை குற்றவாளிகளாகப் பார்க்காதீர்கள்

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 20
இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து ஒரு சமூகத்தின் மீது பக்கச் சார்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்கக் கூடாது. தற்கொலைத் தாக்குதல் இஸ்லாமிய இனத்தை சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக 04

# வைகாசி மாத ராசிபலன்



குரு. சுக்கிரன் ஆகியோர் மாதம் முழுவதும் நன்மைகளைச் செய்வார்கள். மாதத் தொடக்கத்தில் குடும்பத்தில் உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. ஆனாலும், குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலையே காணப்படும். சுபநிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடப்பதால் உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கையும் சிலருக்கு ஏற்படக்கூடும். புதிய மின்சார, மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

சிலருக்கு வெளி மாநிலங்களிலுள்ள புண்ணியத் தலங்களை தரிசிக்கும் வாய்ப்பும் ஏற்படக்கூடும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வருவதற்கான வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும். பிள்ளைகளின் வேலை மற்றும் படிப்புக்காக சிலரின் சிபாரிசை நாடவேண்டி யிருக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். உங்கள் வேலைகளில் மிகுந்த கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றமும் ஏற்படக்கூடும். அதிகாரிகளின் ஆதரவை எதிர்பார்க்க முடியாது. மாதப் பிற்பகுதியில் அரசுப் பணியில் இருப்பவர்கள் தங்கள் பணிகளில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.




தொழில்,வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். சக போட்டியாளர்களால் மறைமுகப் பிரச்னைகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. பற்று வரவில் தவறு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும்.

கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்பார்த்தபடியே வாய்ப்புகள் கிடைக்கும். வருமானமும் அதிகரிக்கும். சிலருக்கு அரசாங்கத்தின் பராட்டும் விருதுகளும் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

மாணவர்கள் கூடுதல் முயற்சி மேற்கொண்டால்தான் மேற்படிப்பைத் தொடர முடியும். அதற்கு ஆசிரியர் மற்றும் பெற்றோரின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாக இருக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். வேலைக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவிஉயர்வு, ஊதியஉயர்வுபோன்றசலுகைகள்கிடைக்கக்கூடும்.

(தொடரும்)

# மே மாத எண் ஜோதிடப் பலன்கள்

எண் ஜோதிடப்படி மே மாதத்தில் எந்த திகதிகளில் பிறந்தவர்களுக்கு என்ன என்ன பலன்கள் என்பதை பார்ப்போம்.



**1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு:**

நடக்காது என்று எதையும் நினைக்காமல் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற துடிப்புடைய ஒன்றாம் எண் அன்பர்களே இந்த மாதம் எதையும் ஒரு முறைக்கு பலமுறை ஆலோசித்து செய்வது நல்லது. மனம் நிலை கொள்ளாமல் ஏதாவது சிந்தித்து கொண்டே இருக்கும். பணவரத்து அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பெறும்.

தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள், அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கும். உங்களது பணி திறமையால் மேல் அதிகாரிகள் திருப்தி அடைவார்கள். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாக பேசும் சூழ்நிலை ஏற்படும்.

பெண்களுக்கு எந்த காரியத்திலும் முடிவு எடுக்கும் முன்பு தீர ஆலோசிப்பது நல்லது. கலைத்துறையினருக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும். அரசியலில் உள்ளவர்களுக்கு மற்றவர்களால் மனகஷ்டம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய எண்ணங்கள் அதிகரிக்கும். பாடங்களை படிக்கும் போது மனதை ஒருமுகபடுத்தி படிப்பது நல்லது.

**2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**

மற்றவர்களை அறிந்து அவர்களுக்கேற்ப நடந்து கொண்டு காரியம் சாதிக்கும் திறமை உடைய இரண்டாம் எண் அன்பர்களே இந்த மாதம் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். எந்த ஒரு வேலையிலும் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உங்களுடன் பக்கபலமாக ஒருவர் இருந்து தேவையான உதவிகளைச் செய்வார். நண்பர்கள் மூலம் புதிய வசதிகள் கிடைக்க பெறுவீர்கள்.

தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். எதிர்ப்புகள் அகலும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். பூமி மூலம் லாபம் கிடைக்கும்.

பெண்களுக்கு திறமையான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். கலைத்துறையினருக்கு வெளிநாடு வாய்ப்புகள் வந்து சேரும். அரசியலில் உள்ளவர்களுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். மனமகிழ்ச்சி உண்டாகும். சிறப்பாக செயல்படுவீர்கள்.

**3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**

சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் இருக்கும் மூன்றாம் எண் அன்பர்களே இந்த மாதம் எதிர்பார்த்த காரியங்கள் மனதுக்கு திருப்தி அளிக்கும் விதத்தில் நடந்து முடியும். கடன் சுமை குறையும். எதிர்ப்புகள் அகலும். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்ய தோன்றும். சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும்.

தொழில், வியாபாரத்தில் கடினமான முயற்சிக்கு பலனாக லாபம் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பதவிகள் தாமதமாக கிடைக்கும். வாழ்க்கை துணையின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்க பெறுவீர்கள்.

பெண்களுக்கு அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. கலைத்துறையினருக்கு வீண்பழி உண்டாகலாம். அரசியலில் உள்ளவர்களுக்கு கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற ஆசிரியர்களின் ஆலோசனையை கேட்டு பயன் பெறுவது நல்லது.

**4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**

பொது காரியங்களில் விருப்பம் உள்ள நான்காம் எண் அன்பர்களே இந்த மாதம் அறிவு திறன் கூடும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். செல்வம் சேரும். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்ப்புகள் அகலும். உங்கள் செயல்களுக்கு இருந்த தடை நீங்கும்.

தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமையும் சாமர்த்தியமும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் ஏற்படும்.

பெண்களுக்கு அறிவுத் திறமை அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். அரசியலில் உள்ளவர்களுக்கு மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும். மாணவர்களுக்கு திறமையாக செயல்பட்டு பாராட்டுகள் கிடைக்க பெறுவீர்கள். கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

**5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு**

எந்த காரியத்தையும் தீர ஆலோசித்து அதில் ஈடுபடும் குணமுடைய ஐந்தாம் எண் அன்பர்களே இந்த மாதம் எல்லா காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். புதிய தொடர்புகள் ஏற்படும். திறமை வெளிப்படும். பல வகையிலும் முன்னேற்றம் உண்டாகும். சொத்து தொடர்பான விஷயங்களில் இழுபறியான நிலை காணப்படும்.

தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமத போக்கு காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணம் செல்ல வேண்டி இருக்கும் குடும்பத்தில் தீடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். குழந்தைகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்குவரும். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு வாய்ப்புகள் கை கூடி வரும். அரசியல் துறையினருக்கு எதிர்பார்த்த பதவிகளை அடைவீர்கள். மாணவர்களுக்கு கல்விக்கான செலவு உண்டாகும். திறமை வெளிப்படும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதன் மூலம் நன்மை ஏற்படும்.

(தொடரும்)

**வாடகைக்கு**
யாழ்.வண்ணார் பண்ணை, லோட்டஸ் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
077 948 4044, 076 101 6580

**பதவி வெற்றிடம்**
திருநெல்வேலியில் இயங்கும் சிமாட் கிட்ஸ் முன்பள்ளிக்கு ஆங்கில ஆசிரியர் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
பாதுகாப்பு உத்தியோகத்தர் (பெண்) தேவை.
077 386 7458

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**
☆ பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
ஆர்வம் உள்ளவர்கள்
25.05.2019 சனிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் முற்பகல் 11.30 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிறுநீரகம் தேவை**
B, O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
T- 076 239 9874

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 444 சீட்டிழுப்பு திகதி: 2019.05.17
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை
C 41 43 61 74
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
2019.05.21ம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்கு இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.




# ரஜினியின் இரட்டை வேடம்



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ரஜினி காந்த் நடிப்பில் உருவாகி வரும் 'தர்பார்' படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு முடிந்த நிலையில், படத்தில் ரஜினிக்கு இரண்டு வேடங்கள் இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு நடந்து முடிந்தது. இரண்டாவது கட்ட படப்பிடிப்பு வருகிற மே 29ஆம் திகதி தொடங்க இருக் கிறது. இந்தப் படத்தில் ரஜினியுடன் நயன் தாரா, நிவேதா தாமஸ், யோகி பாபு ஆகி யோர் நடிக்கிறார்கள்.


படத்தில் ரஜினிகாந்த் பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் என்பது படத்தின் முதல் சுவரொட் டியின் மூலம் உறுதியானது. ரஜினி இந்தப் படத்தில் சமூக சேவகர், அதிரடி பொலிஸ் அதிகாரி என இரட்டை வேடத்தில் நடிப்பதாக முன்னதாக பார்த்திருந்தோம்.

இந்த நிலையில், தற்போது கிடைத்துள்ள தகவல்படி, அவர் 'என்கவுண்ட்டர்' சிறப்பு பொலிஸாக நடிப்பது தெரியவந்துள்ளது. படப்பிடிப்பு நடந்த கல்லூரியிலேயே குற்ற வாளிகளை விசாரிக்கும் சிறப்பு அறையை செட் போட்டு படம்பிடித்துள்ளனர். ரஜினி குற்றவாளியை விசாரிப்பது போன்ற காட் சியை எடுத்துள்ளார்கள்.

மற்றொரு கதாபாத்திரத்தில் ரஜினி தாதா வாக நடிப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் படக்குழு இத்னை உறுதிப்படுத்தவில்லை. தாதா ரஜினிக்கு மகளாக நிவேதா தாமஸ் நடிக்கிறார். 'என்கவுண்ட்டர்' பொர்லிஸ் அதி காரியான ரஜினிக்கு ஜோடியாக நயன்தாரா வருகிறார் என்க் கூறப்படுகின்றது.



# வழி காட்டுவோம்



# வில்லியம் ஹார்வே



பிரிட்டன் நாட்டவரான ஹார்வே ஒரு மருத்துவ நிபுணராவார். குருதிச் சுற்றோட்ட அமைப்பை இவர் கண்டு பிடித்தார். மருத்துவத் துறையில் இவர்மேற் கொண்ட ஆய்வுகள் பின்வருமாறு

1. ஈரலில் குருதி உற்பத்தியாகின்றது.
2. இருதயம் நிமிடத்துக்கு 72முறை சுருங்கிவிரியும் தன்மை வாய்ந்தது.
3. குருதியானது நாடி மூலம் இருதயத்திலிருந்து புறப்பட்டு மீண்டும் நாளம் மூலம் சுவாசப்பை வழியாக இருதயத்தை வந்தடைகிறது.
4. இருதயத்தின் இடது அறையிலிருந்து வெளியேறும் தூய சிவந்த குருதியானது உடம்பின் சகல பாகங்களுக்கும் சென்று அங்குள்ள உறுப்புக்களைப் போசித்து விட்டு ஆங்காங்கு காணப்படும் அழுக்குகளைச் சுமந்து கொண்டு கருங்குருதியாக வலது இதய அறையை வந்தடைகிறது.
5. இருதயம் இரண்டு அவுன் குருதியைக் கொள்ளக் கூடியது. இவ்வாறு இவரது ஆய்வுகளும் கண்டு பிடிப்புகளும் மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கும் மனித குல முன்னேற்றத்துக்கும் இட்டுச் சென்றது.

## பட்டதாரிகளுக்கான...

ரவைப் பத்திரம் இந்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகளிலிருந்து நியமனம் வழங்கப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனைய 20 ஆயிரம் பேர் உள்வாங்கப்படவுள்ளனர். இவ்வாறு உள்வாங்கப்படும் பட்டதாரிகளில் தேசிய ரீதியில் 10 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.
எஞ்சிய 10 ஆயிரம் பேருக்கும் அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படவுள்ளது. நியமனங்கள் ஜூன் மாதம் ஆரம்பத்தில் வழங்கப்படவுள்ளதாக மூத்த அதிகாரி தெரிவித்தார்.

(ஒ.5.105)

## சட்டம்,...

அமைச்சராக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி 98 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட ஆவணம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்கள் அடங்கிய இந்த ஆவணம் கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கை அடங்கிய ஆவணத்தை ஒப்படைக்க அரச தலைவரிடம் நேரம் கோரியபோதும், அரச தலைவர் நேரம் ஒதுக்கவில்லை எனவும், கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக் கூட்டத்துக்கு அரச தலைவர் வந்தபோது அவரிடம் இந்த ஆவணம் ஒப்படைக்கப்பட்டது எனவும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.
சட்டம், ஒழுங்கு அமைச்சராக சரத் பொன்சேகாவை நியமிக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் கோரிக்கையை, தொடர்ச்சியாக அரச தலைவர் நிராகரித்து வருகின்ற நிலையில், கையெழுத்திட்ட ஆவணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஒ.5.22)

## அரசுக்கு...

(ஜே.வி.பி.) நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ளது.
பயங்கரவாத தாக்குதல் இடம்பெறவுள்ளதாக முன்கூட்டியே தகவல் கிடைத்தும் அரசால் அதனை முறியடிக்க முடியிவில்லை. நாட்டில் இடம்பெறும் அடிப்படைவாத செயற்பாடுகளை தடுப்பதற்கான இயலுமையும் அரசிடம் இல்லை. எனவே இந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கட்சியின் மையச் செயற்குழு நாளை கூடும் போது, இறுதி முடிவு எடுக்கப்படும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
மகிந்த அணி கடந்த ஆண்டு அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அது தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ.5)

## நாடாளுமன்ற...

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபாநாயகரிடம் நேரில் கையளித்த பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இது தொடர்பில் தமது கீச்சகத் தளத்தில் பதிவிட்டுள்ளார்.
அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் 64 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், அது நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை சபாநாயகர் தலைமையில் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானத்தை விவாதத்துக்குட்படுத்தும் திகதி தொடர்பில் முடிவெடுக்கப்படும்.

(ஒ.5.22)

## குண்டுத்தாக்குதலால்...

ஒட்டுமொத்த இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களிற்கும் இடையிலான மோதலாக பார்க்க முடியாது. இஸ்லாமிய சமூகத்தினர் மீது வன்முறைகளை மேற்கொள்வதும், அவர்களை குற்றவாளிகளாக பார்ப்பதும் பொருத்தமற்றது. இவ்வாறு தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி.வண.கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள ஆயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இலங்கை அரசமைப்பும் காரணமாக உள்ளது. அரச தலைவர் ஒரு கட்சியும், தலைமை அமைச்சர் ஒரு கட்சியுமாக உள்ள நிலையில் இருவருக்கும் இடையில் புரிந்துணர்வு இல்லாமையும் இவ்வாறான தாக்குதலுக்கு வலுச் சேர்த்துள்ளது. முதலில் இருவருக்கும் இடையில் ஓர் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். மூன்று தசாப்த போர் நிறைவுற்று அமைதியான சூழல் ஏற்பட்டிருந்த நிலையில், அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் இலங்கையை பாதித்துள்ளது. சமாதான சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவின் பெறுமதியும் வீழ்ச்சி அடைந்துள்ளது. வெளிநாட்டவர் வருகை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்கள் இலங்கை குடிமக்களாக அனைவரையுமே தாக்குகின்றது. இந்த நிலையில் பல்லின சமூகத்தவர்களாக நாம் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும். இனங்களுக்கு இடையிலும், சமயங்களுக்கு இடையிலும் நல்லிணக்கத்தை கொண்டு வரவேண்டும். பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இலங்கை குடிமக்களாக உதவ முன்வர வேண்டும்.
தாக்குதல் சம்பவம் தொடரப்பில் முடிந்த பின்னர் ஆராய்வதை பார்க்கிலும், அனி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவாறு பார்க்க வேண்டும். அயல்நாடான இந்தியா உள்ளிட்ட நாடுகளின் புலனாய்வு தகவல்களை வைத்தாவது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற தாக்குதலுக்கு இலங்கை புலனாய்வு பிரிவில் காணப்பட்ட குறைபாடும் காரணம். தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே புலனாய்வு தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், அதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
இந்த தாக்குதல் ஒரு சமூகத்தை இலக்குவைத்தல்ல. அரச தலைவர், தலைமை அமைசச்ர் ஆகியோருக்கு இடையிலான புரிந்துணர்வற்ற நிலை, பாதுகாப்பு பிரிவில் காணப்பட்ட குறைபாடுகள் இந்தத் தாக்குதலுக்கு வழிவகுத்துள்ளது. கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் கிறிஸ்தவர்களை மாத்திரம் இலக்கு வைத்ததல்ல. கொலையாளிகள் அதிகளவானோரை கொள்ள வேண்டும் என்பதற்கு அன்றைய தினம் இலக்காக்கப்பட்டுள்ளது.
நாட்டில் தீவிரவாதம், பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். அதேவேளை இனங்களுக்கு இடையில் சமாதானம் வளர்க்கப்பட வேண்டும். சமய தலைவர்கள் மாத்திரமே சமாதானத்தின் அடையாளமாக அறிக்கைகள், கருத்துக்கள் ஊடாக கருத்துக்களை பதிவு செய்கின்றனர். ஆனால் குறித்த சமாதானத்தின் அல்லது நல்லிணக்கத்தின் இணக்கப்பாடு அடிமட்டம் வரை செல்ல வேண்டும்.
சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணம் ஒதுக்கப்பட்டு வருகின்றதாகவே காண்கின்றேன். சீயோன் தேவாலய தாக்குதலின் பின்னர் அங்கு உதவிகள், தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதாக காண முடியவில்லை. இந்த தாக்குதல் சம்பவத்தை அறிந்ததும் தென்னிந்திய திருச்சபையில் உள்ள 23 ஆதீனங்களின் பேராயர்களும் எம்முடன் தொடர்புகொண்டு எவ்வாறான உதவிகள் வேண்டும் என்று கோரியிருந்தனர். அவர்களைக்கொண்டு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவ உள்ளோம் என்றார்.

(ஒ.5.35)

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கம்மா ஆசைப்பிள்ளை

வதிரி, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா ஆசைப்பிள்ளை நேற்று (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு-சின்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னம்மா, செல்லம்மா, இராசம்மா, முத்தையா, தம்பையா மற்றும் பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராசா மற்றும் இராஜலஷ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தில்செல்வனின் (ஓய்வுநிலை மின்னுத்தியோகத்தர்-இ.மி.ச) அன்பு மாமியும், றொஷானி (சட்டத்தரணி) மற்றும் அகிலாஜினி (இ.ம.ச. கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னரின் பூதவுடல் 21.05.2019 செவ்வாய்க்கிழமை பழைய வளவு, வதிரி, கரவெட்டி இல்லத்தில் வைக்கப்பட்டு முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

071 3319309, 077 7709544

# ஆற்றில் போட்டாலும் அளந்து போடு

ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்பவர்கள். இருவரும் செல்வந்தர்கள் ஆனால் குணத்தில் மட்டும் நேர்மாறானவர்கள்.

ஜெயராமன் என்ற நண்பன் யாருக்காவது சிறு கஷ்டம் என்றாலும் முன்னால் சென்று உதவி செய்பவன். இதனால் ஊரில் உள்ளோர் அவனைக் கலியுகக் கர்ணன்! என்று புகழ்வர். லட்சுமணன் எவருக்கும் உதவி செய்ய முன்வரமாட்டான். அவனை மக்கள் சுயநலக்காரன் என்பர்.

ஒருநாள் இருவரும் அடுத்தடுத்த



காட்டை வாங்கினர். ஜெயராமன் தன் காட்டை அழித்து கனி மரங்களை நட்டான். கிணறு ஒன்றை வெட்டி அவற்றுக்கு நீர் பாய்ச்சினான். சில ஆண்டுகளின் பின் அந்த மரங்கள் கனிகளை வாரி வழங்கின.

லட்சுமணன் தன் நண்பனைப் போல காட்டை அழிக்கவில்லை. அப்படியே காடு வளர்ந்து மரங்களும் புதர்களுமாகக் கிடந்தன.

ஒருநாள் ஜெயராமன் தன் தோட்டத்துக்கு நண்பனின் காட்டுப்பாதையால் சென்று கொண்டிருக்கையில் காட்டு புற்கள் ஜெயராமன் கால்களில் "நறுக் நறுக்''எனக் குத்தின. குருதி வழிந்தோடியது. இதன் காரணமாக இருவரும் வாக்கு வாதம் ஏற்பட்டு பல நாள்கள் இருவரும் பேசாதிருந்தனர்.

நாள்கள் சென்றன. ஜெயராமன் தன் தோட்டத்தில் விளைந்த பழங்களை எல்லாம் பறித்து ஊரிலுள்ளோர் அனைவருக்கும் இலவசமாக வழங்கினான். மகிழ்ச்சிகொண்ட ஊர் மக்கள் அனைவரும் அவனை வாழ்த்தினர். இப்படியே நாளும் ஊர் மக்கள் வாழ்த்த வாழ்த்த ஜெயராமனுக்கு புகழ் போதை தலைக்கேறியது. ஜெயராமன் ஊரையே அழைத்து ஆயிரக் கணக்கில் செலவு செய்தான். மக்களுக்குத் தேவையானதை வாரி வாரி இறைத்தான்.

இதன் காரணமாக அவன் வீட்டு வாசலில் தினமும் மக்கள் குவிந்தனர். ஒருநாள் லட்சுமணன் அவ்விடம் வந்தான். அவன் "ஊர்மக்களே! நீங்கள் யாருடைய பணத்தில் ஆட்டம் போடுகிறீர்கள். ஜெயராமன் தந்தை தன்னுடைய இந்த நிலங்களை விற்று எனது தந்தையிடம் பணம் வாங்கி விட்டார். இப்போது இந்த நிலம் எனக்கே சொந்தம். என் தந்தை இறந்த பின்பே இதைநான் அவர் எழுதி வைத்த காணி உறுதிகள் மூலம் அறிந்துகொண்டேன். இன்று முதல் சட்டபூர்வமாக நான் இந்தக்காணியின் சொந்தக்காரன். இனிமேல் ஜெயராமன் உங்களுக்கெல்லாம் வாரி வழங்குவதை நான் அனுமதியேன் என்றான்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஜெயராமனுக்கு தலை சுற்றி மயக்கம் வருவது போலிருந்தது. அப்போது பார்த்து ஊர்மக்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறினர். அப்போது ஜெயராமன் "போகாதீர்கள் போகாதீர்கள் என்று கத்தினான்.

மக்களோ "போய்யா இனி நீயும் எங்களைப் போல ஏழைதான். உன்னிடம் எங்களுக்குத் தர என்ன இருக்கப் போகிறது''என்று கூறியபடியே சென்று கொண்டிருந்தனர்.

அனைவரும் சென்ற பின் தனித்து நின்ற ஜெயராமனை "வா உள்ளே போகலாம்"என அவன் வீட்டினுள் அழைத்துச் சென்ற லட்மணன். நண்பனே! இங்கு இந்த மக்களுக்கு நான் கூறியதெல்லாம் பொய்யே. நீ இரக்க குணமுடையவன். அதனால் மக்களுக்கு கண் மூடித்தனமாக வாரியிறைத்துக் கொண்டிருக்கிறாய். இந்த மக்கள் உன்னைப் புகழ்ந்து பேசிப் பேசி அதிக போதையை உனக்கு உண்டாக்கி உன்னால் இலாபம் அடைந்து வருகிறார்கள். அவர்களது நடிப்பை இனம்காட்டவே இனி நீ ஏழையாகி விட்டாய். எதுவும் உன்னிடம் இல்லை என்று அவர்களை இப்படிக்கூறி நம்ப வைத்தேன்.

பார்த்தாயா? நீ இனி ஒன்றும் இல்லாதவன் என்றதும் நீர் இல்லாத குளத்தை விட்டு கொக்குகள் பறந்து செல்வதைப் போல எல்லோரும் ஓடி விட்டனர். இந்த நன்றி கெட்டவர்களிடம் இனி நீ இப்படி நடக்க வேண்டாம்"என்றான் லட்சுமணன். ''நண்பா என்னை வஞ்சித்து வாழ்ந்தவர்களை உன்னால் அடையாளம் கண்டு கொண்டேன். புகழ் போதையில் மூழ்கி இருந்த என்னைத்தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டாய். உனக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை"என்று நா தழு தழுக்கக் கூறினான் ஜெயராமன்.

**தனக்கு மிஞ்சித்தான் தானம்.**


## மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள், என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- ★காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
- ★காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
- ★பெற்றோர் விருப்பமின்மையா?
- ★கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
- ★வேலைத்தளத்தில் பிரச்சினையா?
- ★காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

{இரகசியம் பேணப்படும்}

- ■ நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- ■ உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- ■ நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்

**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.

**0778 432 602 / 075 302 4239**

என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.


## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

# பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் 02.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது சங்கப் பணிமனையில் இடம்பெற உள்ளது. அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர்**
**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்**

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சந்திரபூரணி பூபாலபிள்ளை**

(திதி:- திருதியை (06.06.2019)

தோற்றம் 13.10.1947 — மறைவு 20.05.2015

உயிருக்கு உயிராக இருந்து
எம்மைக் காத்த அன்னையே
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம்துயரம்...
அம்மா உங்கள் நினைவுடன்
என்றும் நாம் வாழ்கின்றோம்.

குடும்பத்தினர்.
கலைமகள் வீதி, நல்லூர்.

## மரண அறிவித்தல்



மலர்வு 12 . 03 . 1932 — உதிர்வு 19 . 05 . 2019

### திருமதி திலகவதி குமாரசாமி

ஐயனார் வீதி, சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி குமாரசாமி நேற்று (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், அருந்தவராஜா, சற்குணராஜா (குணம்), கணேசமூர்த்தி, கோபாலகிருஷ்ணன், கிருபாகரன், தனபாலசிங்கம், சிவபாதம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கனகலட்சுமி, உதயசந்திரிகா, சறோஜாதேவி, நாகேஸ்வரி, சிவசுந்தரி, பிரபாநிதி, லோஜினி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை கொம்பிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
(பிலிப்பியர்-1:21)

## மரண அறிவித்தல்



மண்ணில் 23 . 02 . 1950 — விண்ணில் 18 . 05 . 2019

### சுப்பையா சண்முகராசா

யாழ் கன்னாதிட்டியை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சண்முகராசா 18.05.2019 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-இராசம்மா தம்பதியரின் மகனும், ஜெயாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மீனாட்சி மற்றும் தனலக்சுமி, ஜெயலட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், ராஜம், கீதா, ஜெயபாரதி (சுவிஸ்), நாககிருஷ்ணன் (காலேப்), மாலதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், புவனேந்திரம், ரகுராமன், தீத்து, மனாசே, சர்மிளா (சர்மி) ஆகியோரின் அன்பு மாமனும், ரதுஜன், பவினகா, ஸ்டீபன், காருண்ஜா, ஜோசஸ், திவ்யா, கிரேசியன், ஹெவன்ஸ்டான், அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (22.05.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடி கல்வாரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழம் வீதி, ஆதித்தியன் வளவு,
கோப்பாய் தெற்கு, இருபாலை.

தகவல்: குடும்பத்தினர்.
காலேப் - மகன்

**077 608 2228**



# நித்திய அன்னதானம் பற்றிய நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## விஷேட அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் என்ற எமது ஆலயத்தின் பெயரில் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ ஸ்தாபன ரீதியான கட்டடங்களோ, அமைப்புக்களோ, முகவர்களோ எவரும் இல்லை என்பதை சகல மக்களுக்கும் இவ் விளம்பரத்தின் மூலம் பகிரங்கப்படுத்துகின்றோம். அவ்வாறு யாராவது செயற்படுவதையோ, அமைப்பு ரீதியாகவோ, தனியாகவோ இயங்குவதையோ நாம் வேதனையுடன் ஆட்சேபிக்கின்றோம். அவ்வாறு யாராவது செயற்பட்டால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம் ஆலய நிர்வாகத்துக்கு ஏற்படும் என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

இதேபோல், இவ்வாலய வீதியில் நித்திய அன்னதான மண்டபத்தில் தினசரி அன்னதானம் வழங்கும் பணியை நீண்டகாலமாக ஆலய நிர்வாகமே அடியார்களின் மனமுவந்த உதவியோடு எவ்வித தளர்வுமின்றி செய்துவருகின்றது. இங்கு நடைபெற்றுவரும் தினசரி அன்னதான பணிக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தைத் தவிர வேறு எவருக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை. அறங்காவலர் சபையே முழுப்பொறுப்புக்கும் உரியது. பொறுப்புக் கூறலுக்கும் உரியது என்பதை அனைவருக்கும் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாய தேவைப் பாடு எமக்கு ஏற்பட்டுள்ளதால் அதனையும் தெளிவுபடுத்திக் கொள்கின்றோம். அடியார்களிடமிருந்து முறைப்பாடுகள் வருவதால் இதனை விளம்பரப்படுத்த வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் பெயரால், சிலர் திருவிழாக் காலங்களிலும் விசேட தினங்களிலும் கிராமங்கள் தோறும் சென்று பணமும், பொருளும் வசூல் செய்து வருவதாகவும் அறிகின்றோம். எமது ஆலயத்தின் பெயரில் நிதியோ பொருளோ சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அடியார்கள் தாமாகவே விரும்பி முன்வந்து பங்களிப்புச் செய்வதை மட்டுமே நாமும் விரும்புகின்றோம். ஏற்கின்றோம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு நிதியுதவி செய்யவிரும்பும் அடியார்கள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கிக் கணக்குகளுக்கோ அன்றி **"பொருளாளர் அறங்காவலர் சபை, நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் கோயில், நயினாதீவு, ஸ்ரீலங்கா"** என்னும் முகவ ரிக்கு நேரடியாகவே அனுப்பி வைக்கலாம் என்பதை அறியத்தருவதோடு வங்கி மூலமாகப் பணத்தினை அனுப்புவோர் அது பற்றிய விவரத்தினை எமக்கு அறியத்தரும் பட்சத்தில் நிதிக்குரிய பற்றுச்சீட்டினையும் அம்பாளின் பிரசாதத்தையும் அனுப்பி வைக்க எமக்குப் பெரிதும் உதவியாக இருக்குமென்பதையும் அறியத் தருகின்றோம்.

**வங்கிக் கணக்கு விவரம்**

க/கு இல 012426285-01 வர்த்தக வங்கி பெற்றா கொழும்பு
க/கு இல 1060012330 வர்த்தக வங்கி - வேலணை
க/கு இல 007687860 இலங்கை வங்கி -வேலணை

ஆலயத்துக்கு அன்பர்கள் ஏதாவது செலுத்த விரும்பும் இடத்து ஆலய அறங்காவலர் சபையினருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு உரிய தகவல்களைப் பெற்று, அதன்பிரகாரம் செயற்படுமாறு அனைத்து அன்புள்ளங்களையும் தயுவன்புடன் வேண்டி நிற்கின்றோம். தயவுசெய்து எமது ஆலயத் தொடர்புகள் எதுவும் இல்லாதவர்கள் எவரிடமும் ஏமாற்றம் அடைய வேண்டாம் எனவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம். அம்பிகையின் அருளாசிகள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைப்பதாக.

**நேரடித் தொடர்புகளுக்குரிய தொலைபேசி இலக்கங்கள்**
**021 321 3024, 021 321 3025, 021 320 7785**
**அறங்காவலர்சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.**

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நிறைவேற்று அலுவலர் பதவிக்கான வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படை)

சேவை மனப்பாங்கும் அர்ப்பணிப்பும் ஆன்மீக சேவையில் நாட்டமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்து சமய ஆசாரம் உடையவராகவும், மும்மொழி ஆற்றல் மற்றும் கணினி அறிவுடையவராகவும் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவராகவோ அல்லது நிர்வாக சேவை அனுபவமுடையவராகவோ இருப்பதுடன் 45 - 62 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

இந்நியமனம் ஒப்பந்த அடிப்படையில் அமைவதுடன் தேவையேற்படின் 65 வயது வரை சேவை நீடிக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் சுயமாக தயாரிக்கப்பட்டு பூரண விபரங்களுடன் இரு பிரமுகர்களின் பெயர் தொலைபேசி விவரங்களுடன் 30.05.2019 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் **"செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு "** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அறங்காவலர் சபையினரின் முடிவே இறுதி முடிவாகும்.

**செயலாளர்**
**நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**
**நயினாதீவு.**

## மணமகன் தேவை

யாழ்.இந்து, 1992 ஆம் ஆண்டு திருவாதிரை 3ஆம் பாதம், உயரம் 5'5", கிரகபாவம் 63, 7 இல் செவ்வாய், ஆசிரியராகப் பணிபுரியும் மணமகளுக்கு அரச துறையில் பணிபுரியும் மணமகன் தேவை.

**077 583 6657**

(CS/25445)(11.17)

## பெயர் மாற்றம்

விசுவமடு மேற்கு, விசுவமடு, முல்லைத்தீவு எனும் முகவரியில் வசிக்கும் நடேசமூர்த்தி மங்கையற்கரசு ( 555942443V ) ஆகிய எனது பெயரை இன்றிலிருந்து நடேசமூர்த்தி மங்கையற்கரசி என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் இவ்வாறே சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**நடேசமூர்த்தி மங்கையற்கரசி**

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் முத்துத்தம்பி

*(ஓய்வு பெற்ற லிகிதர் யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி)*



வாரியா வளவு கல்லாரை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் முத்துத்தம்பி 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் மல்லாகம் மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும் பன்னாலை கந்தையா - அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஜெயமலரின் அன்புக் கணவரும் துஷ்யந்தினி (ஆசிரியை -அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), சீறிமயூரன் (யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நிற்குணானந்தன் (நீர்வேலி), அருளினி (யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் - ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலக் ஷன், பூர்விகன், கோபிகன், ஜெனனிக்கா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் இராசம்மா, சுப்பிரமணியம் வல்லிபுரம், பொன்னம்மா மற்றும் திருமதி தனலக்சுமி ஆகியோரின் சகோதரரும் ஜெயராம், மகேஸ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2019) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பன்னாலை,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 438 7499**

தோற்றம்
04
06
1945



மறைவு
18
05
2019

### திருமதி மகேஸ்வரி (செல்லம்) சிற்றம்பலம்

வரணி வடக்கு, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி (செல்லம்) சிற்றம்பலம் 18.05.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம்- வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற தெய்வநாயகி மற்றும் பொன்னம்பலம், சரஸ்வதிதேவி, இந்திராதேவி ஆகியோரின் சகோதரியும், சிவனையா காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் சிவரஞ்சிதம், நடராசா, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, மகேந்திரலிங்கம், விமலேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், சுபேந்திரன் (பிரான்ஸ்), சுபத்திரா (கனடா), சுஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபேஜினி, ஸ்ரீரங்கன், கஜீவா ஆகியோரின் அன்பு மாமியாரும், றோஷன், துசாந், சாக்ஷனா, லோசனா, ஹன்சிகா, சாருஜா, கன்சிகன் ஆகியோரி அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கியைக்காக ஐயன் கண்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வரணி வடக்கு.**
**வரணி.**

(IN/10242)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 469 4404, 0033 646 433 752**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 10ஆண்டுகளின்பின்...

போர் முடிந்து 10 ஆண்டுகளாகிவிட்டன. இதில் முதல் 5 ஆண்டுகள் போர் வெற்றி மமதையில் கழிந்துவிட்டன. மிகுதி 5 ஆண்டுகள் அப்படி நடந்து கொண்டது தவறு என்று கூறிக் கடந்துவிட்டன. 10 ஆண்டுகள் நிறைவில் ஒருமைப்பாடு, நல்லிணக்கம், நல்லாட்சி என்கிற உரத்த குரல்களின் நடுவே இலங்கை மேலும் கூர்மையாகப் பல துண்டங்களாகப் பிளவுபட்டு நிற்கின்றது, இதனையே கடந்து சென்றிருக்கும் மே 18 உணர்த்திச்சென்றிருக்கின்றது. அதாவது எந்தத் திசை நோக்கி இந்த நாடு முன்னேறவேண்டுமோ அதற்கான கூக்குரல்கள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே அது எதிர்த்திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது என்கிற உண்மை அம்பலப்பட்டு நிற்கின்றது.

வழக்கம் போலவே இம்முறையும் வடக்கும் தெற்கும் போரின் இருவேறுபட்ட முகங்களையே வெளிக்காட்டியது. தெற்கு போர் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, அதே போரில் கொன்றொழிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் நினைவான நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் மண்ணில் உணர்வெழுச்சியுடன் நிகழ்ந்துகொண்டிருந்தன.

கடந்த காலங்களைவிட இன்னும் அழுத்தமாகவும் நேர்த்தியாகவும் மனிதப் பேரவலத்தின் சாட்சிகள் முள்ளிவாய்க்காலில் கூடி போர் முடிந்து 10 ஆண்டுகளாகியும் நீதி நிலைநாட்டப்படவில்லை, தமிழர்கள் அடிமைப்படுத்தப்படுவது தொடர்கின்றது என்கிற அறைகூவலை உலகிற்கு எடுத்தியம்பினர். எல்லா அரசியலையும் கடந்து, மக்கள் தமது துயரை தமிழ் அரசியல்வாதிகளையும் சாட்சிகளாகக் கொண்டு ஓங்கி ஒலித்தனர்.

முப்பதாண்டுகள் தொடர்ந்த போர் நிறைவடைந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும்கூட, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை நிலைநாட்ட இலங்கை அரசு தவறிவிட்டதென மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது. அதையே முள்ளிவாய்க்காலில் கூடி நின்ற மக்களும் அவர்களோடு மானசீகமாக இணைந்திருந்த மக்கள்கூட்டமும் கொழும்புக்கும் உலகுக்கும் உரக்க ஒலித்தது.

அதே நேரத்தில் கொழும்பு போர்வெற்றிக் கொண்டாட்டங்களோடு புத்த பெருமானின் வெசாக் கொண்டாட்டங்களிலும் திளைத்திருந்தது. நாட்டின் ஒரு பகுதியில் ஒரு தொகுதி மக்களின் அழுகுரலுக்கு எந்த மதிப்பும் இல்லாமல் அது தனது வெற்றிக் களிப்பின் திளைப்பை விட்டுக்கொடுக்க முடியாத மனோநிலைக்குள் தொடர்ந்தும் சிக்கிக் கொண்டிருந்தது.

இந்த இரு அந்தங்களிலும் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய மூன்றாவது பிளவாக ஒரு புறத்தில் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுவெடிப்புக்களும் அதன் பின்னரான நிலமைகளும் கூர்மையடைந்திருக்கின்றன. இந்த நிலை சிங்களவர்களின் வெற்றிக் கொண்டாட்டங்களிலும் தமிழர்களின் நினைவேந்தல் நிகழ்வுகளிலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துமளவிற்குக் கூர்மை மிக்கதாக இருந்ததைப் புறந்தள்ளிவிட முடியாது.

இரு தரப்புப் பிளவுகளின் நடுவில் பந்தாடப்பட்டுவந்த முஸ்லிம்தரப்பு இன்று மூன்றாவது தனித்தரப்பாக அரசியல் நிலைப்படுத்தப்பட்டிருப்பது நாடு ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் நோக்கி நகர்வதற்குப் பதில் பிளவுகள் கூர்மையடைந்த மேலும் மோசமான நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதையே காட்டுகின்றது.

போர் முடிந்த 10 ஆண்டுகளில் நீதியை நிலைநாட்டாமல், மனித உரிமை மீறல்களையும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும் மூடி மறைக்க முயற்சித்த படி எல்லாச் சமூகங்களும் எல்லா மதங்களும் நல்லிணக்கத்துடன் கூடி வாழக்கூடிய நாடாக இலங்கையை மாற்ற சிங்கள, பௌத்த மேலாதிக்க வாதம் மறுத்தமைதான் இதற்கெல்லாம் காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்த மனோநிலை மாறாதவரையில் பிளவுகள் இன்னமும் கூர்மையடையும் சாத்தியங்கள்தான் அதிகம்.

# ஆளுக்கொரு நீதி நாட்டின் தலைவிதியா?

சேரலாதன்

பயங்கரவாதத்துக்கு அஞ்ச மாட்டேனெச் சூளுரைத்திருக்கும் அரச தலைவர் அரசியல்வாதிகள் சிலருக்கு அஞ்சி நடப்பது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஐ.எஸ் ஐ.எஸ் பயங்கரவாதம் நாட்டின் இயல்பு நிலையை முற்றாகவே இல்லாமல் செய்துவிட்டது. கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுதாரிகளின் குண்டு வெடிப்பில் ஏராளமான அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டதன் விளைவாக முழு நாடும் அதிர்ச்சியில் உறைந்து விட்டது. அரசு அக்கறையீனமாக நடந்து கொண்டதன் விளைவாகவே உயிர்த்த ஞாயிறு தினம் சோகமாக மாறியதாகப் பலரும் குற்றம்சாட்டினர். தாக்குதல் தொடர்பாக எச்சரிக்கைகள் முற்கூட்டியே விடுக்கப்பட்டி ருந்த நிலையிலும் அதனைத் தடுப்பதற்கு அரசினால் முடியவில்லை. எம்மை விட்டு விடுங்களென ஐ.எஸ் ஐ.எஸ்சிடம் கையேந்துவதற்கு மட்டுமே அரச தலைவரால் அப்போது முடிந்தது.



### பயங்கரவாதத்தின் உறைவிடமாக மாறியுள்ள கிழக்கு

தற்போது பயங்கரவாதிகளின் திட்டங்களை முறியடிக்கும் வகையில் முப்படையினரும் பொலிஸாரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதைக் காணமுடிகின்றது. பயிற்சி முகாம்களும், பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன. பயங்கரவாதத்துடன் தொடர்புடைய பலரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இங்குள்ள சிலருக்கு வெளிநாடுகளிலிருந்து பெருமளவு பணம் அனுப்பி வைக்கப்பட்டமையும் இங்குள்ள வர்த்தகர்கள் பலரும் தீவிரவாதப் போக்குடையவர்களுக்குப் பணத்தை அள்ளி வீசியதும் தெரியவந்துள்ளன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் போது அடிப்படைவாதிகள் நீண்ட காலமாக இங்கு செயற்பட்டு வந்தமை உறுதியாகின்றது. இவர்களில் பலர் வேறு தேவைகளுக்கெனக் கூறி வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சிகளைப் பெற்று வந்தமையும் தற்போது தெரியவருகின்றது. இவை தொடர்பாக நாட்டின் புலனாய்வுத் துறையினர் அறிந்திராமல் போனது ஆச்சரியத்துக்குரியது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சமூகத்தினர் பெருமளவில் வாழ்கின்றனர். குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகரம் தவிர்ந்த ஏனைய இடங்களில் முஸ்லிம்களின் ஆதிக்கமே காணப்படுகின்றது. அதனை விட மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியிலும் அவர்கள் ஆதிக்கம் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். அம்பாறையின் சாய்ந்த மருதும் மட்டக்களப்பின் காத்தான்குடியும் அடிப்படைவாதிகளின் தளங்களாகச் செயற்பட்டமை தற்போது தெரியவந்துள்ளது.

### கிழக்கு ஆளுநரை நோக்கி நீளும் குற்றச்சாட்டுகள்

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. அவரைப் பதவியில் நியமித்தது தவறெனவும் உடனடியாகப் பதவியிலிருந்து அகற்றுமாறு கோரிக்கை விடுத்தே போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆனால்தான் எவருக்குமே அஞ்சப் போவதில்லையெனவும் அரச தலைவரால் மட்டுமே தம்மைப் பதவியிலிருந்து அகற்ற முடியுமெனவும் ஹிஸ்புல்லா கூறுகிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த இவர் தற்போது கிழக்கு மாகாணத்தின் ஆளுநராகப் பதவி வகிக்கின்றமை பொருத்தமானதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாது மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்துடன் இவருக்கு உள்ள தொடர்புகள் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் அடிப்படை வாதிகளுடனான இவரது ஈடுபாடு தொடர்பாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டு வருகின்றது. ஆனால் தம்மை அரச தலைவர் எந்தத் தருணத்திலும் காப்பாற்றி விடுவாரென்ற நம்பிக்கையுடன் ஹிஸ்புல்லா இருக்கின்றமை தெளிவாகத் தெரிகின்றது. இவர் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் எழுந்த போது அரச தலைவர் அவை தொடர்பாக அக்கறை காட்டியதாகவே தெரியவில்லை. மக்களின் உணர்வுகளுக்கும் அவர் மதிப்பளிக்கவில்லை. ஆட்சியின் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் நடுநிலைமாறிச் செயற்படும்போது நாட்டில் நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

### பகடைக் காயாகும் முன்னாள் போராளிகள்

மட்டக்களப்பு வவுணதீவில் இரண்டு பொலிஸார் படுகொலை தொடர்பாக கடந்த ஆறு மாதங்களாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளியான அஜந்தன் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இவரது விடுதலை தொடர்பாக அவரது மனைவியும் பிள்ளைகளும் மிகுந்த வேதனையுடன் மற்றவர்களின் கவனத்தை ஈர்த்து வந்தனர். தற்போது அந்தப் பொலிஸ்காரர்களைக் கொலை செய்தது ஸக்ரான் குழுவினரே என்பது நிரூபணமாகியுள்ளதால் அஜந்தனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் விடிவு கிடைத்துள்ளது. உயிர்த்த ஞாயிறுதினம் தாக்குதல் நடைபெறாது இருந்திருக்குமானால் அஜந்தனின் நிலைவேறு விதமாகவே மாறியிருக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை.

இதேவேளை கிளிநொச்சியைச் சேர்ந்த முன்னாள் போராளியான ஆனந்த சுதாகரன் அரசதலைவரால் வாக்குறுதி வழங்கப்பட்டவாறு இன்னமும் ஓர் அரசியல் கைதியாகவே சிறைக்குள் அடைக்கப்பட்டுள்ளார். இவரது இளவயதுக்குழந்தைகள் தாயையும் இழந்து தந்தையையும் பிரிந்து வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் பதவியைப் பயன்படுத்தி கொலைகளைப் புரிந்த பலர் எவ்வித தண்டனையுமின்றி சுதந்திரமாக உலவி வருகின்றனர். நீதி என்பது சகல மக்களுக்கும் பொதுவானது. இதில் மேல்தட்டு, கீழ்த்தட்டு என்ற பேதத்துக்கே இடமில்லை. ஆனால் இந்த நாட்டில் ஆளுக்கொரு நீதி என்பதுதான் எழுதாத தலைவிதியாக மாறிவிட்டது.

# வற்றாப்பளை க...
# வைகாசி விசாகப் பொ...



## வற்றாத நீரில் வி...

வற்றாப்பளையூர் கண்ணகை அம்மன் திருத்தலம், முல்லைத்...
அமைந்துள்ளது. இது முல்லைத்தீவு -மாங்குளம் பிரதான வீதியிலி...
தொடுக்கப்பட்டுள்ளது. ஒரு வழி மூன்றாம் கட்டையடி பாதை...
அழைக்கப்படும் பாதையாகவும் உள்ளது. சுமார் மூன்று மைல் தூரம் ...
தென்னை மரங்களும், கமுகு, வாழை, மா, பலா, தோடை முதலிய ம...
வனமும், நெல் வயல்கள் நீர் நிலைகள் வற்றாத நீர் ஊற்றுக்கள் சூழ்...
செய்கின்றன. 'பத்தாம் பளை' என்பது அம்மனின் பத்தாவது தங்...
கோயிலின் வரலாறு நோக்கியறிய முடிகிறது, 1956 ஆம் ஆண்டு ...
கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஆநிரை மேய்த்து நின்ற இடைச் சி...
பொங்கல் படையல் செய்யுமாறு வேண்டி நிற்க, இடைச் சிறுவர்களுக்...
எரிப்பதற்கு எண்ணெய் இல்லையே என ஏங்கி நின்ற அந்தச் சிறுவ...
நீரினைச் சுட்டிக் காட்டிய அம்பாள் "கடல் நீரெடுத்து எனக்கு விளக்...
எடுக்கப்பட்ட அந்த நீரானது நெய்யாக பாவிக்கப்படுகிறது. கடல் ...
சிறுவர்கள் ஆரவாரித்தார்கள். அதிசயித்தார்கள். ஊரவர்களை மூதாட்...
கூவும் இடைச் சிறுவர்கள் கிழவிக்குப் பேன் பார்த்தார்கள். சற்று நேரத்...
னர். கோயிலின் முன் பக்கத்தில் பரந்து பட்டுக் காணப்படும் சிறுகட...
சிறுகடல் முல்லைத்தீவு பெருங்கடலுடன் தொடுவையாகவுள்ளது. ம...
வளம் பொருந்திய சூழல் அங்கு காணப்படும். குறைந்த மட்ட ஆழத்தி...
மக்கள் பெற்றுள்ளார்கள்.

'சிலம்பு கூறல்' என்னும் சிலப்பதிகாரக் காப்பியம், தெய்வீகம்...
கண்ணகி, தெய்விகக் கண்ணகைத் தேவியாகவும் சக்தி வழிபாட்டின் ...
நிறைந்த இந்த சிலம்பு கூறல் காப்பியத்தை இயற்றியவர் வெற்றிவே...
மேற்படி அம்பாள் திருத்தலப் பொங்கல் விழாவன்றும் அதற்கு முன்னு...
படிக்கப் பெறும், இதை ஆர்வத்துடனும், பக்தியுடனும், கேட்போர் இ...
அருள் கடாட்சம் இவர்களுக்கும், இவர் போல இந்நூற் கதையை தெ...



### ஆசிச்செய்தி

இன்று 20-05-2019 திங்கட்கிழமை நடைபெறவுள்ள வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு உதயன் பத்திரிகை நிறுவனத்தார் சிறப்பு மலர் வெளியிடுவதைப் பாராட்டி முயற்சி எல்லா வகையிலும் சிறப்புற எமது ஆலய பரிபாலன சபையின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுகளின் பின் நாட்டின் எல்லா நிகழ்ச்சிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒரு மாத கால எல்லைக்குள் நடைபெறவுள்ள மிகப்பெரும் இந்து சமய நிகழ்வு எமது ஆலயப் பொங்கல் உற்சவம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வுற்சவத்தினை சுமுகமாக நடத்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையிலான மாவட்ட அரச திணைகளத் தலைவர்கள், பாதுகாப்பு பிரிவை சேர்ந்த தரைப்படை, கடற்படை, விமானப்படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் பகுதித் தலைமை அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் விழாவினை வழமைபோல நடத்துவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

பாக்குத்தெண்டல், தீர்த்தமெடுத்தல் ஆகிய ஆரம்ப கிரிகைகள் வழமை போல சிறப்பாக நிறைவேறியுள்ளன.

விசாக நட்சத்திரம், வைகாசிபூரணை ஆகிய நட்சத்திர, திதி என்பவற்றுக்கு அண்மித்தான திங்கட்கிழமை அன்று வழமை போல ஆலயப் பொங்கல் விழா நடைபெறவும். அம்மன் அருள் வேண்டி வருகின்ற அடியவர்கள் வேண்டுவன வேண்டியவாறு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறும் இறையருள் முன்னிற்க ஆசிவேண்டுகின்றோம்.

மு. குகதாசன்.
தலைவர் ஆலயபரிபாலனசபை.

















## தீவிரவாதத்தை எதிர்த்து வவுனியாவில் வழிபாடு

வவுனியா,மே 20
நாட்டில் இடம்பெற்ற தீவிரவாதச் செயற்பாட்டுக்கு எதிராகவும் நாட்டில் சிறுபான்மை சமூகத்துக்காகக் குரல்கொடுக்கும் அமைச்சர்களின் பாதுகாப்பை வேண்டியும் சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.
வவுனியா பட்டக்காடு பகுதியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் தக்வா பள்ளிவாசலில் கடந்த வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணியளவில் சிறப்பு வழி பாடு இடம்பெற்றது.
பள்ளிவாசலின் தலைவர் எ.ஆர்.எம்.லரீப் தலைமையில் இடம்பெற்ற வழிபாட்டில் வவுனியா நகர பள்ளிவாசல் நிர்வாகிகள், பட்டானிச்சூர் ஜும்மா பள்ளிவாசலின் நிர்வாகிகள், பட்டக்காடு ஜும்மா பள்ளிவாசலின் நிர்வாகிகள் என வவுனியா விலுள்ள பெரும்பாலான பள்ளிவாசல்களின் நிர் வாகிகள் மற்றும் கிராமத்திலுள்ள பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)



## வெசாக் தின ஆரம்ப நிகழ்வு

மன்னார்,மே 20
வெசாக் தின ஆரம்ப நிகழ்வு மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கடந்த வெள் ளிக்கிழமை இடம்பெற்றது.
"தீவிரவாதத்துக்கு மதம், தர்மம் கிடையாது.மதம் தர்மத்தின் மூலம் தீவிரவாதத்தைத் தோற்கடிக்க முடியும்" எனும் தொனிப்பொருளில் நாடு முழுவதும் வெசாக் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.
இந்த நிலையில் மதங்களின் மூலம் தீவிரவாதத்தை தோற்கடிப்பதன் முக்கியத்துவத்தை இளைஞர்கள் தெளிவுபடுத்தும் நோக்கில் மன்னாரில் குறித்த வெசாக் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் விருந்தினர்களாகத் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வன்னி மாகாணப் பணிப்பாளர் என்.எம்.முனவ்பர், மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.மஜித் , தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னார் மாவட்ட தேசிய பிரதி நிதிகளான ஜோசப் நயன் மற்றும் ஜசோதரன் ஆகியோருடன் மும்மதத்தையும் சேர்ந்த இளையோர் கலந்து கொண்டனர். (ஐ-56,213)

## மாவட்டங்களுக்கிடையில் சொகுசு பேருந்துச் சேவை

### வடக்கு முன்னாள் உறுப்பினர் ஆளுநரிடம் கோரிக்கை

*யாழ்ப்பாணம், மே 20*
வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கு மிடையே வசதிமிக்க சொகுசு பேருந்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்குப் பொதுமக்கள் மத்தியில் இருந்து பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யாழ்ப்பாண வணிகர் கழக உபதலைவருமான இ.ஜெயசேகரன் வடக்கு மாகாண ஆளுநர் ராகவனுக்குக் கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.
கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பேருந்துக் கம்பனிகளின் இணையம் ஆயத்தமாகவே உள்ளதாக அறிகின்றேன். ஆகவே இந்த சேவையை உடன் ஆரம்பிப்பதற்கு இன்றுவரை அது ஆரம்பிக்கப்படவில்லை. இந்த சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் அரச ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் உல்லாச பயணிகள் பயன் பெறுவர். அத்துடன் வடக்கு மாகாண உல்லாசத்துறையும் வளர்ச்சியடைய நிறைய வாய்ப்புள்ளன.
எந்த தடையும் இல்லை.
இந்த சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பயணிகளின் நன்மைக்கு அப்பால், இதன் மூலம் பலபேர் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் வாய்ப்புள்ளது.
வடக்கு மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நகரங்களுக்கிடையிலான சொகுசுப் போக்குவரத்துச் சேவை அந்தந்த மாகாணங்களில் திறம்பட நடத்தப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் அதற்குரிய வாய்ப்புக்கள் நிறையவே இருந்தும், இந்தச்சேவைக்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை.
இந்தக் கோரிக்கை தொடர்பாக கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டு, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தின் மேற்படி ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளங்களுக்குப் பயணம் செய்யும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணிகள் மகிழ்ச்சியோடு மனோரம்மியமான சூழ்நிலையில் தங்கள் பிரயாணங்களை மேற்கொள்ள முடியும். இந்த வசதியை ஏற்படுத்துவதன் மூலம் வடக்கு மாகாணத்துக்குவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.
இந்தச் சேவைகளை உடனே ஆரம்பிப்பதற்கு இந்த மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆளுநரைக் கோரியுள்ளார்.
இது சம்மந்தமாக யாழ்ப்பாணப் பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பேருந்துக் கம்பனிகளின் இணையத்தினருடன் கலந்துரையாட ஆயத்தமாக உள்ளோம் - என்று ஜெயசேகரன் ஆளுநரைக் கோரியுள்ளார். (த)



வவுனியா, குருமன்காடு சிறி காளியம்மன் ஆலய பெருந்திருவிழாவின் தேர் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. காலை 7.30 மணியளவில் வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து காளிகாம்பாள் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். (ஐ)



## நான்கு பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

வவுனியா, மே 20
வவுனியா மாவட்ட செயலர் ஐ.எம்.கனீபாவால் நான்கு பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.
ரீப் திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட நான்கு பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்களும், மாவட்ட கால்பந்தாட்ட அணி மற்றும் கரப்பந்தாட்ட அணிகளுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் விளையாட்டு அதிகாரி பர்சூக் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-110)

## சீரமைக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை பாடசாலையிடம் கையளிப்பு

வவுனியா,மே 20
வவுனியா அகில இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையின் சிற்றுண்டிச்சாலை சீரமைக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
குறித்த சிற்றுண்டிச்சாலை கட்டடமானது 2003ஆம் ஆண்டில் சாதாரண தரம் கற்ற பழைய மாணவர்களால், நான்கு இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் சீரமைக்கப்பட்டு பாடசாலையின் பயன்பாட்டுக்காகக் கையளிக்கப்பட்டது. நிகழ்வில் கோட்டக் கல்வி அதிகாரி சி.மரியநாயகம், வவுனியா தெற்கு வலயத்தின் பிரதிக்கல்வி பணிப்பாளர் எஸ்.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சிற்றுண்டிச்சாலையைத் திறந்து வைத்தனர். (ஐ-110)



## மடிக் கணினிகள் அன்பளிப்பு

வவுனியா,மே 20
வவுனியா சேமமடு சண்முகானந்தா மகா வித்தியாலயத்துக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக் கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.
தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தால் இந்த உதவி வழங்கப்பட்டது.
நிகழ்வில் தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் நிறுவுநரும் வவுனியா நகரசபை உறுப்பினருமான சந்திரகுலசிங்கம் மோகன் , தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் ஆலோசகர் நா.சதீஸ், உறுப்பினர்களான சந்திரன்,பாலா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-110)



## குமுதினிப் படுகொலையின் 34ஆவது நினைவு நிகழ்வு

கிளிநொச்சி, மே 20
குமுதினிப் படுகொலையின் 34ஆவது நினைவு நாள் நிகழ்வுகள் படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.
குறித்த நிகழ்வில் நினைவு சுடரை அந்தப் படகில் பயணித்துத் தன்னுடைய 7 மாத குழந்தையை பறிகொடுத்த தாய் ஏற்றி வைத்தார்.
அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு ருத்ரனின் "நீலக்கடலலையின் நினைவுகள்



பாகம் 3" நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றது. நூலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வெளியிட்டு வைத்தார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், பிரதேச சபையின் உறுப்பினர்கள், அருட்தந்தை, அருட்சகோதரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-6)


## சிக்கன கூ.சங்கம் நவாலியில் ஆரம்பம்


யாழ்ப்பாணம், மே 20
வலி.தென்மேற்கில் உள்ள நவாலி வடக்கு- தெற்கு மக்களின் நன்மை கருதி சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நவாலி சிந்தாமணிப்பிள்ளையார் சிக்கனக் கடன் உதவு கூட்டுறவுச் சங்கம் என்று அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.
சங்கத் தலைவராக சமூக ஆர்வலர் குமரையா ரவீந்திரன், செயலராக செல்லத்துரை குணரதி, பொருளாளராக திருமதி கணேசமூர்த்தி சிவறூபலதா, உப தலைவராக ஆசிரியை செல்வராணி செல்வத்துரை மற்றும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.
நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட சமாச வெளிக்கள அதிகாரி திருமதி கிருஸ்ணாதேவி சுந்தரராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். "இந்தச் சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கம் மூலமாக விவசாய கடன், அரவணைப்பு கடன், சகாய நிதி கடன் உட்பட 14 வகையான கடன் உதவித் திட்டங்களின் நன்மைகளை நவாலி மக்கள் முழுமையாக அனுபவிக்கலாம்" என்று அவர் தெரிவித்தார்.
சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட விவசாய சங்கங்களின் அதிகார சபை செயலரும் கூட்டுறவாளருமான ச.செல்வரத்தினம் கலந்துகொண்டார்.
"நவாலி வடக்கு- தெற்கு மக்கள் உட்பட நவாலியின் ஏனைய பிரதேச மக்களும் இந்தச் சங்கத்தில் 100 ரூபா செலுத்தி உறுப்பினராகலாம்" அவர் அவர் தெரிவித்தார். (த-50)

## கிராம அலுவலருக்கு பிரிவுபசார நிகழ்வு

கொடிகாமம், மே 20
இராமாவில் பிரிவில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற பொருளாதார அபிவிருத்தி அலுவலருக்கு கிராம மக்கள் கடந்த சனிக்கிழமை பிரிவுபசார நிகழ்வு நடத்தினர். இராமாவில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் சு.சண்முகம் தலைமையில் மீசாலை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.
பிரிவு கிராம அலுவலர் எஸ்.கஸ்தூரி, பொருளாதார அபிவிருத்தி அலுவலர் அனுசாமலர், ஓய்வுநிலை கிராம அலுவலர் க.ஞானேஸ்வரன், சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் ஞா.திலகராணி, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் அமிர்தகுலசிங்கம் கிருபாளினி, முன்னாள் தாதிய அலுவலர் திருமதி விநாயகமூர்த்தி புஸ்பநிதி, கிராம மட்டப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-159)







யாழ்ப்பாணம் ஏழாலை அத்தியடி விநாயகர் திருக்கோவில் (ஏழுகோவில்) பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது. (த)

## சுற்றுலா அமைச்சின் ஊடாக 56 குடும்பங்களுக்கு வீடுகள்

யாழ்ப்பாணம், மே 20
**வடக்கு மாகாணத்தில் மிகவும் வறுமைக்குட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 56 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.**

வடக்கு மாகாண நிதி திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சு ஊடாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.
வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 30 வீடுகளும் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 26 வீடுகளுமாக மேற்படி வீடுகள் அமைக்கப்படுகின்றன.
ஒரு வீட்டுக்கு 9 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. துரித திட்டத்தின் கீழ் இவ்வாண்டு முதற்கட்டமாக 56 வீடுகளும் உரிய பயனாளிகளிடம் கையளிக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சம்பந்தப்பட்ட அமைச்சைப் பணித்துள்ளார். (ம-50)

## வலி.மேற்கு பி.சபைக்கு புதிய செயலர் நியமனம்

யாழ்ப்பாணம், மே 20
வலி.மேற்குப் பிரதேச சபையின் புதிய செயலராக சுப்றா தரத்தைச் சேர்ந்த கிருஸ்ணானந்தம் விஜயேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
வடக்கு மாகாணத்தில் 13 வருடங்களாக இவர் கணக்காய்வாளராகப் பணியாற்றியுள்ளார்.
வலி.மேற்குப் பிரதேச சபையில் இதற்கு முன்னர் செயலராகக் கடமையாற்றிய ப.விமலதாஸ் கட்டடங்கள் திணைக்களத்துக்கு இணைக்கப்பட்டுள்ளார். (த-50)

## சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு விடுவதற்கு முடிவு

### இழுபறியின் பின்னர் முடிவு எடுக்கப்பட்டது

சாவகச்சேரி, மே 20
சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு விடுவது தொடர்பாகக் கடந்த மூன்று மாதங்களாக இழுபறியில் காணப்பட்ட விடயம் தவிசாளரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் குத்தகைக்கு விடுவதென்று முடிவாகியுள்ளது.
சாவகச்சேரி நகரசபையின் அமர்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது பொதுச் சந்தையைக் குத்தகைக்க விடுவதென்று முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
சாவகச்சேரிப் பொதுச்சந்தை மிக நீண்ட கால பழைமை வாய்ந்தது. இதுவரை காலமும் சந்தை குத்தகைக்கு விடப்படவில்லை. எமக்கு முன்னர் ஆட்சியிலிருந்த எந்தவொரு சபையும் சந்தையைக் குத்தகைக்கு விடவில்லை. இருப்பினும் சபையை மூன்று தடவைகள் குத்தகைக்கு விடுவது தொடர்பாக ஆராயப்பட்டன. சந்தையைக் குத்தகைக்கு விட வேண்டாம் என்று சந்தை வியாபாரிகளும் பொதுமக்களும் எழுத்து மூலம் கடிதங்கள் வழங்கியுள்ளனர். நுகர்வோர் மற்றும் வியாபாரிகளின் நலன்கருதி சந்தையைக் குத்தகைக்கு விடக் கூடாது என்று தவிசாளர் தெரிவித்திருந்தார்.
அந்தவேளையில் உரையாற்றிய சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், சந்தையைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாக ஆராயப்பட்டபோது அங்கு பணியாற்றும் வரிவசூலிப்பாளர்கள் வாசலில் வைத்து பற்றுச்சீட்டு வழங்கப்படல் வேண்டும். அதற்கெனக் கடவைகளில் கொட்டில்கள் அமைக்க வேண்டுமென்று தெரிவித்தனர். இதுவரை அதனை நடைமுறைப்படுத்தவில்லை. வரிவசூலிப்பாளர்கள் தொடர்ந்து வெயில் மழையில் வாசலில் நின்று பற்றுச்சீட்டு வழங்குவதை அனுமதிக்க முடியாது. சந்தையில் உழவர் பிரிவு அமைக்க வேண்டுமென்று பலதடவைகள் வலியுறுத்தியும் அதற்கான கொட்டகை போடப்படவில்லை. சபை உறுப்பினர்களின் மேற்பார்வையில் கடந்த மூன்று மாதங்களாகச் சந்தை வருமானம் அதிகரித்து வருகிறது. சந்தைக்கென்று பொறுப்பில் உள்ள அதிகாரிகள் ஒழுங்காகச் செயற்படுவதில்லை. சந்தைக்கு நிரந்தர வருமானப் பரிசோதகர் நியமிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தும் அங்கு கடமையில் உள்ள அலுவலர் பற்றுச்சீட்டைப் பரிசோதனை செய்வதுமில்லை. வரிவசூலிப்பாளர்களைக் கண்காணிப்பதுமில்லை. வரிவசூலிப்பாளர்களை அலுவலர்கள் கண்காணித்தால் நிச்சயம் வருமானம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. சந்தைக்கு நிரந்தர வரிவசூலிப்பாளர் ஆளணி இன்மையால் தனியார் நிறுவனத்தினரால் நியமிக்கப்பட்டவர்களே பணியாற்றுகின்றனர்.
சபை மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான நிதியை நாளாந்தம் பெறுவதை விட ஒரே நேரத்தில் குத்தகையாளரால் செலுத்தப்படும் தொகையை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
அதனால் தவிசாளர் தெரிவித்ததற்கு அமைவாக நுகர்வோருக்கும் வியாபாரிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நிபந்தனைகளை விதித்து குத்தகைக்கு விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (த-9)

## மக்கள் பங்கேற்புத் திட்டத்தை சபைகள் முழுமை செய்துள்ளன

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 16 உள்ளூராட்சி சபைகளும் பிரதேச மட்ட மக்கள் பங்கேற்புத் திட்டத்தை முழுமை செய்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
இவ்வாறு பூர்த்தி செய்த 13 பிரதேச சபைகள், 3 நகரசபைகள் தமது பிரதேச மட்ட மக்கள் பங்கேற்புத் திட்டத்தை அவற்றின் செயலர்கள் யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி முருகனேசன் சுலோச்சனாவிடம் அண்மையில் கையளித்துள்ளனர்.
வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகளும் அந்தந்த மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களிடம் இவற்றைக் கையளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-50)

## சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இருவருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 20
யாழ்ப்பாணம் கொக்குவில் கேணியடியில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முஸ்லிம்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாண நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது.
கொக்குவில் சந்தேகத்துக்கு இடமாக இருவர் நடமாடுவது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் இருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுகின்றனர் என்று கடந்த வியாழக்கிழமை தமக்கு அறிவிக்கப்பட்டது. அன்படி அங்கு சென்று இருவரிடமும் விசாரணை நடத்தினோம். கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தினோம். "சந்தேகநபர்கள் முஸ்லிம்கள் எனத் தம்மை அறிமுகப்படுத்தி அடையாள அட்டையை வழங்கினர். அவர்கள் ஓட்டுமடத்தில் வசிக்கின்ற போதும் கொக்குவில் பகுதியில் நடமாடியமைக்கான காரணத்தைக் கூறவில்லை. அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடவேண்டும்" என்று பொலிஸார் மன்றுரைத்தனர்.
"சந்தேகநபர்களை கொக்குவிலில் கைதுசெய்யவில்லை. அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றே பொலிஸார் கைது செய்தனர். அவர்களை பிணையில் விடுவிக்கவேண்டும்" என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மன்றில் விண்ணப்பம் செய்தார். இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல், சந்தேகநபர்களை வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (த-37)

# முள்ளிவாய்க்கால் நிகழ்வு மக்கள் மயப்படுத்தப்பட்டது

## ரவிகரன் தெரிவிப்பு



முல்லைத்தீவு, மே 20

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வேண்டும் என்ற நோக்கத்தோடு முள்ளிவாய்க்கால் மண்ணிலே மக்கள் மயப்படுத்தப்பட்ட நினைவுகூரல் நிகழ்வு இடம்பெற்றதாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பயந்த சூழலிலும் பல கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தமது உறவுகளுக்காக மக்கள் ஒன்றுகூடியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்காலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போது மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் இந்த இறுதிப் போரில் தமது பிள்ளைகளை இழந்தும், கணவனை இழந்தும், அங்கவீனப்பட்டும் வாழ்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டும், சிறைகளில் அடைக்கப்பட்டும் உள்ளனர். பன்னாட்டுச் சமூகம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் அரசியல்வாதிகளின் தலைமையின்றி மக்களின் குரலான மக்கள் மயப்பட்டதாகத் தொடர்ந்தும் நடக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-246)

# ஜனநாயகப் போராளிகள் கட்சியும் நினைவேந்தல்

மட்டக்களப்பு, மே 20

ஜனநாயகப் போராளிகள் கட்சி ஏற்பாடு செய்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு வெல்லாவெளியிலுள்ள கட்சியின் மட்டு. அம்பாறை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

கட்சியின் மட்டு அம்பாறை மாவட்ட இணைப்பாளர் என்.நகுலேஸ் மற்றும் மட்டு அம்பாறை மாவட்ட ஊடகப் போச்சாளர் ச.சாந்தன், அலுவலகப் பொறுப்பாளர் க.கோபால் மற்றும் கிழக்கு மாகாணசபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர் மா.நடராசா உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த அனைத்து உறவுகளுக்கும் ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் நினைவு உரைகளும் இடம்பெற்றன. (து)





# திருக்கோவிலில் நினைவேந்தல்

அம்பாறை, மே 20

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு திருக்கோவில், விநாயகபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேசசபைத் தவிசாளர் டபிள்யூ இ.கமலராஜன், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், உறுப்பினர்களான த.மோகனதாஸ், எஸ்.ஜெயராணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்காகத் தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. விநாயகபுரம் மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் ஆத்மார்த்த பூசைகளும் இடம்பெற்றுள்ளன. (து-222)



# நினைவேந்தலையடுத்து பாற்கஞ்சி வழங்கப்பட்டது

கொடிகாமம், மே. 20

முள்ளி வாய்க்கால் நினைவேந்தலன்று கொடிகாமம் நகரப் பகுதியில் சந்தை வீதியிலுள்ள காளிகாம்பாள் கோவிலில் முற்பகல் 10.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் செ.மயூரன் தலைமையில் பாற்கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கொடிகாமம் மத்தி கிராம அபிவிருத்திச் சங்க தலைவரும் முன்னாள் அதிபருமான அ.திருநாவுக்கரசு, வர்த்தக சங்கத்தினர், பொது மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கோவில் முன்றலில் 10.30 மணிக்கு நினைவேந்தல் சுடரேற்றி மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் பாற்கஞ்சி வழங்கப்பட்டது.

கொடிகாமம் நகர் பகுதி வர்த்தகர்களும் பொது அமைப்புக்களும் பொது மக்களும் இணைந்து நேற்று சந்தை வியாபாரி களுக்கும் பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் பாற்கஞ்சி வழங்கினர். முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பாக கொடிகாமம் நகரப் பகுதி வர்த்தகர்களும் பொது அமைப்புக்களும் மக்களும் இணைந்து வருடாவருடம் பாற்கஞ்சி வழங்குகின்றனர். (து-159)

# நினைவேந்தலன்று தாகசாந்தி நிலையம்

முல்லைத்தீவு, மே 20

முள்ளிவாய்க்கால் பத்தாம் ஆண்டு நினைவேந்த லன்றுபுதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள வணிக நிலையங்கள் மற்றும் சந்தை என்பனவற்றைப் பூட்டி வணிகர்கள் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர்.

வன்னிக்குறோஸ் தாயக நினைவேந்தல் அமைப்பினர் புதுக்குடியிருப்புச் சந்தியில் தாகசாந்தி நிலையம் ஒன்றை அமைத்து அனைவருக்கும் குளிர்பானங்களை வழங்கினர். அந்த இடத்தில் முள்ளிவாய்க்கால் போரில் உயிரிழந்தவர்கள் நினைவாக நினைவுத்தூபி அமைத்து சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர். வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் சுடரேற்றி வைத்தார். தொடர்ந்து பொது திரு வுருவப் படத்துக்கு மலர் தூபி வணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து தாக சாந்தி நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது. (து-ரி3)





# நாவற்குழியிலும் பானம் வழங்கல்

கொடிகாமம், மே. 20

முள்ளி வாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு நாவற்குழி முச்சக்கரவண்டி சங்கத்தினரும் நாவற்குழிப் பிரதேச இளைஞர்களும் இணைந்து நாவற்குழிச் சந்தியில் நேற்றுமுன்தினம் பாற்கஞ்சி, உப்புக் கஞ்சி, குளிர்பானம் போன்றவற்றை வழங்கினர்.

நினைவேந்தல் சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 4 மணிவரை இவை வழங்கப்பட்டன. (து-159)



# நினைவேந்தலையொட்டி கஞ்சி, ரொட்டி வழங்கல்

கிளிநொச்சி, மே 20

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலன்று கிளிநொச்சியில் கஞ்சி வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் கஞ்சி வழங்கப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக இது வழங்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் கஞ்சியை உணவாக உட்கொண்ட நினைவை மீட்டும் வகையில் இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

பொரிக்கப்பட்ட ரொட்டி மற்றும் மாவினால் உருட்டப்பட்ட பொரி போன்றனவும் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (து-6)

# மன்னார் நாயாறு பகுதி கடலில் இறந்து மிதக்கின்றன மீன்கள்!

மன்னார், மே 20


மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட விடத்தல்தீவு நாயாறு பகுதியில் கடலில் கலக்கும் ஆற்றில் சில நாள்களாக ஆயிரக்கணக்கான மீன்கள் இறந்து மிதக்கின்றன என்று மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் தொடக்கம் ஆற்றின் சற்றுத் தொலைவில் இறால் வளர்ப்புப் பண்ணை ஒன்று அமைக்க வேகமாக வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பண்ணைக்கு நாயாற்றிலிருந்து நீரை எடுக்கும் நோக்கோடு கால்வாய்கள் வெட்டப்பட்டு குளாய் மூலம் தண்ணீரை இறைத்துள்ளமை குறித்த ஆற்றில் மீன்கள் இறப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று மீனவர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் யாழ்ப்பாணம் முதன்மை வீதியை அண்மித்து இது உள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கரையோர பாதுகாப்புத் திணைக்களம் , கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், மாந்தை மேற்கு பிரதேச செயலகம் உட்பட உரிய திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளோம். மன்னார் நீதிவான் மன்றிலும் சம்பவம் தொடர்பாக அறி க்கை சமர்ப்பித்து வேண்டுகோள் விடுக்க ப்பட்டுள்ளதாக விடத்தல்தீவு மேற்கு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இறந்த நிலையில் காணப்பட்ட பல ஆயிரக்கணக்கான மீன்கள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. ஆற்றுக்குள்ளும் பல இலட்சம் மீன் குஞ்சுகள் மிதந்து காணப்படுகின்றன.



குறித்த ஆற்றில் கடல் நீர், வெள்ளம் வற்று இயற்கைக்கு ஏற்றவாறு ஆற்றில் நீர் காணப்படும் நாயாற்றில் மீன் இனங்கள்வந்துமுட்டையிட்டு குஞ்சுகள் பொரித்துச் செல்லும் இடமாகவே இந்த ஆறு காணப்படுகின்றது.

மீன் குஞ்சுகள் இவ்வாறு இறந்து காணப்பட்டதாக பல நூறு வருடங்களுக்குப் பின்னர் கண்டறியப்பட்டுள் ளது.

இதை ஆய்வுக்குட்படுத்த வேண்டுமென்று மீனவர்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர். தமது வாழ்வாதாரம் இதன் காரணமாகவே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விடத்தல் தீவு மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நு-56)

## விவசாய போதனாசிரியர்களுக்கான பால்நிலை தொடர்பான செயலமர்வு



முல்லைத்தீவு, மே 20

ஒட்டுசுட்டான் பிரதேச பிரிவுகளில் பணிபுரியும் விவசாய போதனாசிரியர்கள் மற்றும் அந்தப் பிரதேச விவசாய அமைப்புகளுடைய பிரதிநிதிகளுக்கான பால்நிலை சமத்துவம் தொடர்பான செயலமர்வு கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. ஒக்ஸ்பாம் நிதி அனுசரணையுடன் நடைபெற்ற நிகழ்வு ஒட்டுசுட்டான் விவசாய திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(ம-222)

## வற்றாப்பளை கண்ணகை அம்மனை அடைந்துள்ளது பாதயாத்திரைக் குழு

யாழ்ப்பாணம், மே 20

வடக்கில் இருந்து கதிர்காமக் கந்தன் கோவிலை நோக்கி புறப்பட்டுள்ள கதிர்காமகந்தன் பாதயாத்திரை குழு முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலை சென்றடைந்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் இடம்பெற்ற சிறப்புப் பூசையுடன் ஆண்கள் பெண்கள் உள்ளிட்ட சுமார் 35 பேர் கொண்ட குழுவினர் இந்தப் பாதயாத்திரையை ஆரம்பித்தனர்.

இந்தக் குழுவினர் வலிகிழக்கு தென்மராட்சி பிரதேசங்கள் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தை கடந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ண ்க் அம்மன் கோவிலை தற்போது சென்றடைந்துள்ளது. வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலில் வருடாந்த பொங்கல் உற்சவம் நிறைவுற்றதும் அங்கிருந்து திருகோணமலை மாவட்டத்தை நோக்கி பாதயாத்திரைக் குழுவினர் பயணமாவார்கள் அங்கிருந்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களை மற்றும் குமண காட்டுப்பாதை வழியாக கதிர்காம கந்தன் வருடாந்த மஹோற்சவ கொடியேற்றத் தினத்தன்று கதிர்காமத்தைச் சென்றடைவார்கள்.

(ம-173)

## தேனீக்களின் திருவிழா

யாழ்ப்பாணம், மே 20

உலக தேனீக்கள் தினத்தை முன்னிட்டு காரைநகரில் தேனீக்களின் திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தேனீ வளர்ப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் காரைநகர் கோவளம் ஞானியார் கோவில் மண்டபத்தில் காலை 9 மணிக்கு மேற்படி திருவிழா நடைபெறும். தேனீ வளர்ப்பாளர்கள் மற்றும் இயற்கை விரும்பிகள் சிறுதொழில் முயற்சியாளர்கள் அனைவரும் விழாவில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கோழிச்சந்தை இடமாற்றம்

பருத்தித்துறை வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் கோழிச் சந்தை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் கிராமக்கோடு சந்தியடியில் மருதங்கேணி வீதியில் முதலியார் வாசிகசாலைக்கு அருகில் கோழிச் சந்தை இயங்கிவந்தது. தற்போது பருத்தித்துறை - யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் புலோலி சாரையடியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியில் இயங்கத் தொடங்கியுள்ளது.

வாரத்தில் திங்கள் புதன் கிழமைகளில் நடைபெற்றுவரும் இந்தக் கோழிச் சந்தையில் கோழிக் குஞ்சுகள், இறைச்சி கோழிகள், வளர்ப்பு கோழிகள் பெருமளவில் சந்தைப் படுத்தப்பட்டுவருகின்றன.

(ம-173)

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

## குரும்பைக்கட்டியில் குருதிக்கொடை நிகழ்வு

பருத்தித்துறை, மே 20

பருத்தித்துறை குரும்பைக் கட்டிப் பகுதியில் இளைஞர்கள் நேற்று குருதிக் கொடை வழங்கினர்.

தொலைக்காட்சி மின்னிணைப்பு மேற்கொண்டிருந்த வேளை உயிரிழந்த இராசநாயகம் அஜந் (தங்கம்) என்பரின் மூன்றாவது ஆண்டு நினைவாகவே குருதிக் கொடை வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

குரும்பைகட்டி உதய சூரியன் விளையாட்டுக் கழகம் மற்றும் ஹாட்லிக் கல்லூரி 2015ஆம் ஆண்டின் க.பொ.த உயர் தர மாணவர்கள், நண்பர்கள் இணைந்து இந்தக் குருதிக் கொடை நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தனர். நிகழ்வு குரும்பைக்கட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. (ம-21,160)

## சேட்டை புரிந்தொரென இளைஞன் கைதானார்

வவுனியா, மே 20

இரவுநேரம் கணவனுடன் நடந்துசென்ற குடும்பப்பெண்ணுக்கு அங்க சேட்டை செய்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வவுனியா தர்மலிங்கம் வீதியில் சில நாள்களுக்கு முன்னர் நடந்தது.

அந்தப் பெண் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். அங்கு பொலிஸார் வருவதைக் கண்டதும் இளைஞன் தப்பிக்க முயற்சித்துள்ளார். பொலிஸார் இளைஞனை மடக்கிப்பிடித்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். (நு-222)

## கரைதுறைப்பற்று சபைக்கு ஒரு தொகுதி புத்தகங்கள்

*இந்திய துணைத் தூதரகம் வழங்கியது*

முல்லைத்தீவு, மே 20

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுரகம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு ஒரு தொகுதி புத்தகங்களை வழங்கியுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக கொன்சியூலர் பாலச்சந்திரன் புத்தகங்களை தவிசாளர் மற்றும் சபையின் உறுப்பினர்களிடம் வழங்கினார். இதன்போது இந்த ஆண்டுக்குரிய இந்தியாவின் புலமைப் பரிசில் திட்டங்கள் தொடர்பிலும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. (நு,ரி-3)

## ஒய்வூதிய நடைமுறைகள் பற்றிய இருநாள் பயிற்சி கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், மே 20

ஓய்வூதிய நடைமுறைகள் தொடர்பான இரண்டு நாள் பயிற்சிமுகாம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட திணை க்களங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவைத் துரிதப்ப டுத்தும் வகையில் அலுவலகங்களில் பணியாற்றும் தெரிவு செய்யப்பட்ட 25 அலுவலர்களுக்கே இந்தப் பயிற்சி இடம்பெறவுள்ளது. பயிற்சி நெறிகள் எதிர்வரும் மே 27 மற்றும் 28 ஆகிய திகதிகளில் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணியகப் பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கூட்டுறவு, கைத்தொழில், நீர்ப்பாசனம், மாவட்டச் செயலகங்கள், மருத்துவமனைகள், உள்ளூராட்சி மன்றங்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணியகங்கள், கிளிநொச்சி துணுக்காய் வவுனியா ஆகிய கல்வி வலயங்கள் ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 அலுவலர்கள் இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளவுள்ளனர் என வடக்கு மாகாண தலைமைச் செயலக, ஆளணியும் பயிற்சிகளும் அலகின் பணிப்பாளர் திருமதி த.உமா தெரிவித்தார்.

(ம-21,9)

## சொற்பொழிவு

வடமராட்சி, மே 20

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி மாதந்தோறும் இடம்பெறும் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தச் சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்.

(ம-173)

## ஆசிரிய நியமனங்கள் பெறுபவர்கள் புதனுக்குள் கடமையேற்க வேண்டும்

யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாணத்தில் இன்று திங்கட்கிழமை ஆசிரியர் நியமனங்களை பெறுபவர்கள் நாளை மறுதினம் புதன் கிழமைக்குள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்று மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்து கொள்வதற்காக 72 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் இன்று வழங்கப்படவுள்ளது. இதில் தகவல் தொழில்நுட்ப பாடத்துக்காக 57 பேரும், கணித விஞ்ஞான பாடத்துக்காக 15 பேரும் நியமனம் பெறுகின்றனர். இவ்வாறு நியமனங்களைப் பெறுபவர்கள் நாளைமறுதினம் அதாவது புதன்கிழமைக்குள் நியமிக்கப்பட்ட பாடசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கடந்த கால உரிமை மீறல்களுக்காக இலங்கை பொறுப்புக்கூற வேண்டும்

## *பிரிட்டன் தொழிற்கட்சி வலியுறுத்து*

கொழும்பு, மே 20

இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள பிரிட்டன் தொழில்கட்சித் தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான ஜெரமி கொர்வின், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவும், அவர்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவும் முன்னெடுக்கப்படக் கூடிய செயற்பாடுகளுக்கு எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய தொழில்கட்சி அரசு ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.



அவர் தெரிவித்துள்ளதாவது:
படுமோசமான படுகொலைகளின் பத்தாவது வருடத்தை நினைவுகூரும் இந்தச் சந்தர்ப்பம் மிகவும் கவலைக்குரியது. அட்டூழியங்கள் செய்யப்பட்டன என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம்.
மனித உரிமை மீறல்களுக்கு ஒரு முடிவு வேண்டும். அட்டூழியங்களுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டும். அரசியல் இணக்கத் தீர்வொன்று காணப்பட்டு. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். நிலைபேறான சமாதானத்திற்கு இது முக்கியமானதாகும்.
எதிர்காலத்தில் பிரிட்டனில் பதவிக்கு வரக்கூடிய தொழில் கட்சி அரசு இலங்கைக்கான வர்த்தக மற்றும் ஆயுத விற்பனை தொடர்பில் இராஜதந்திர நெருக்குதல்களைப் பிரயோகிக்கும். மனித உரிமைகள் தொடர்பான பொறுப்புக் கூறல்களுக்கு வற்புறுத்தும். கொடூரமான போர் நடைபெற்ற காலகட்டத்தில் இலங்கையின் வடக்கில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை இன்று நாம் நினைவு கூருகிறோம். அவர்களின் நினைவாக அட்டூழியம் செய்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கோருகின்றோம். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களையும் அதற்குப் பிறகு முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளையும் கடுமையாகக் கண்டிக்கின்றோம்- என்றார். (எ-61)

# 'சோபா'வால் கரையோரம் அமெரிக்கா வசமாகிவிடும்

## *தேசத்துரோகம் என்று சீறுகிறார் ரியர் அட்மிரல்*

கொழும்பு, மே 20



தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க அரசுடன் செய்துகொண்ட 'சோபா' உடன்படிக்கையின் மூலமாக திருகோணமலை தொடக்கம் கொழும்பு வரையிலான பகுதிகள் அமெரிக்காவின் வர்த்தக வலையமாக அமையவுள்ளது. இந்த உடன்படிக்கை மூலமாக தலைமை அமைச்சர் மீண்டும் தேசதுரோக செயல் செய்துள்ளார் என்று ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். சமநிலைக்கான தேசிய சக்தி அமைப்பு ராஜகிரியவில் அமைந்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைமை காரியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்க அரச திணைக்களம் நேற்று வெளியிட்டிருந்த அறிக்கையில் நுழைவிசைவு உதவித் திட்டத்தில் இலங்கையையும் இனைத்துள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. காரணம் இலங்கையில் தீவிரவாத பதற்ற நிலையைத் தடுக்க அமெரிக்கா இராணுவத்தினரை இலங்கை நாட்டுக்குள் அனுமதித்தமை மற்றும் அவர்களுடைய முகாம்களை இலங்கையில் அமைப்பதற்கான அனுமதியையும் இலங்கையின் தலைமைஅமைச்சர் வழங்கியுள்ளமையே. இதற்கான அதிகாரத்தை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியது யார் என்ற கோள்வி எழுகிறது. விக்கிரமசிங்க தேச துரோகி என்று இந்த நடவடிக்கையின் மூலமாகவும் அமெரிக்க அரசுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள 'சோபா' உடன்படிக்கையின் மூலமாகவும் உறுதியாகியுள்ளது. இந்த உடன்படிக்கை மூலமாக இலங்கையின் திருகோணமலை தொடக்கம் கொழும்பு வரையான 21 இலட்சம் ஏக்கர் காணியில் வர்த்தக வலையத்தை அமெரிக்கா உருவாக்கவுள்ளது.
அதுமட்டும் இன்றி அந்த நிலங்கள் அமெரிக்காவின் நிலச் சட்டத்துக்கு உட்பட்டே காணப்படும் என்பதுடன் அவர்களுக்கு விரும்பிய வகையிலேயே அந்த இடங்கள் முகாமைத்துவம் செய்யப்படும். இந்தச் செயற்பாட்டின் மூலமாக சுயமதிப்பையும் தேசியப் பாதுகாப்பையும் அமெரிக்காவிடம் விக்கிரமசிங்க காட்டிக்கொடுத்துள்ளார்.
அமெரிக்க ஆதிக்கம் இலங்கையில் காணப்படுமாயின் சிரியா, லிபிய நாடுகளுக்கு ஏற்பட்ட நிலை இலங்கைக்கும் ஏற்படும் அபாயம் உண்டு.
இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னரான காலப்பகுதிகளில் சிங்களவர்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிரான எந்தவிதமான தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. எனினும் குண்டுத் தாக்குதல் நடைப்பெற்று மூன்று கிழமையின் பின்னர் இந்த அரசு அடாவடிக்காரர்களை ஏவிவிட்டு கடை உடைப்பு, தீ வைப்பு, பள்ளிவாசல்களை உடைத்தல் போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.
ஆயுதங்கள் வைத்திருந்த முஸ்லிம் 'அடிப்படைவாதிகளை இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யாமல் சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர். இதிலிருந்து இந்த அரசு சிங்கள மக்களுக்கு எதிராக செயற்படுகின்றமை தெளிவாகின்றது. இன்றுவரை இந்த அரசு ரிசாட் பதியுதீன், அஷாத் சாலி, முஜிபூர் ரஹ்மான், ஹிஸ்புல்லா போன்றவர்களைக் கைது செய்யவோ விசாரணைக்குற்படுத்தவோ இல்லை. முஸ்லிம்களின் வாக்குகளுக்காக இந்த அரசு நாட்டின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது- என்றார். (த-31)

# ரிசாத் மீதான குற்றச்சாட்டு ஆதாரமற்றது!

கொழும்பு, மே 20

அமைச்சர் ரிசாட் பதியூதின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு உரிய தண்டனைக் கொடுக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் முதலில் குரல் கொடுப்பவன் நானாகவே இருப்பேன். அதைவிடுத்து அரசியல் இலாபத்துக்கு அவர் மீது குற்றம் சாட்டுவதையும் அவருக்கு எதிராக கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கும் மலையக மக்கள் முன்னணி ஆதரவு வழங்காது என்று மலையக மக்கள் முன்னணி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், சிறப்புப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.
அட்டன், வெலிஓயா மேற்பிரிவு தோட்டத்தில் சுதந்திரபுரம் வீடமைப்புத் திட்டத்தில் 30 குடும்பங்களுக்கு காணி உறுதி பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் ஆனது அமைச்சர் மீது தனிப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கையாகும். சிறுபான்மைக் கட்சிகளும், சிறுபான்மை மக்களும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.
வெறுமனே வதந்திகள் மூலமாகவும் ஒவ்வொரு அரசியல்வாதிகளுக்கு தனது ஆதாயத்தைத் தேடிக்கொள்ளும் நோக்கத்துடனும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் நோக்கத்துக்காக ஒரு சிலரின் அரசியல் சுய வளர்ச்சிக்காக கொண்டு வரப்படும் இவ்வாறான தீர்மானங்களை நான் என்றும் ஆதரவு அளிக்கமாட்டோம்- என்றார். (எ)

# ஒழுங்கு மரபின் காரணமாகவே மகிந்த கையெழுத்திடவில்லை

## *கூட்டு எதிரணி விளக்கம்*

கொழும்பு, மே 20

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கையெழுத்திடாமல் இருப்பதற்கு எடுத்த தீர்மானம் ஒழுங்கு மரபின் அடிப்படையிலானதே என்று கூட்டு எதிரணி விளக்கம் கூறியுள்ளது.
ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பலருடன் பதியுதீன் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டி, அவருக்கெதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் 64 உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.
கூட்டு எதிரணியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கடந்த வியாழக்கிழமை காலை சபாநாயகரிடம் கையளித்திருந்தார்.
அமைச்சர்களுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்களில் ராஜபக்சவின் கையெழுத்தைப் பெறுவதில்லை என்று ஏற்கனவே கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களால் தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருந்தது.
தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அல்லது அரச தலைவரைப் பதவி நீக்குவதற்கான அரசியல் குற்றத் தீர்மானம் ஒன்றில் மாத்திரமே அவர் கைச்சாத்திடுவார் என்று கம்மன்பில தெரிவித்துள்ளார்.
கூட்டு எதிரணியால் அமைச்சர் ஒருவருக்கு அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட எந்தவொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலும் மகிந்த ராஜபக்ச கைச்சாத்திட்டிருக்கவில்லை என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (எ-31)

# ரிசாத், ஹிஸ்புல்லா ஆகியோரை கைது செய்யக்கோரி முறைப்பாடு

## *தேரர்கள் இணைந்து பதிவுசெய்தனர்*

கொழும்பு, மே 20

ராவணா பலய மற்றும் சிங்கள ராவய உள்ளிட்ட அமைப்புக்களில் அங்கம் வகிக்கும் தேரர்கள் குழுவொன்று வணிக, கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோரைக் கைது செய்யுமாறு பொலிஸ் தலைமையகத்தில் கடந்த புதன் கிழமை முறைப்பாடளித்துள்ளது.
முறைப்பாடளிக்கச் சென்ற தேரர்கள் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:
அமைச்சர் ரிசாத் மற்றும் ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோர் இந்த அடிப்படைவாதத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. இது தொடர்பில் நாம் அரசிடம் பலமுறை வலியுறுத்தியுள்ள போதிலும் இன்று வரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
இவர்கள் இருவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். நாடு முழுவதும் வாள் மற்றும் கூரிய ஆயுதங்கள் மீட்கப்படுகின்றன.
எதற்காக இத்தகைய ஆயுதங்களை வைத்திருக்கின்றார்கள் என்று புரி ய வில்லை.
ரிசாத் பதியுதீனின் வழிகாட்டலிலேயே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவர் பன்னாடுகளுக்குச் சென்ற ஏனையவர்கள் எம்மைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டுகின்றார்.
இலங்கையிலுள்ள ஊடகமொன்றுக்கு பணம் வழங்கி அவருக்கு சார்பாக அந்த ஊடகத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார். சட்டம் முறையாகக் கையாளப்படுகின்றது என்று கூற முடியாதுள்ளது.
இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டு தாக்குதல்களை புறந்தள்ளுவதற்காக இஸ்லாம் அரசியல்வாதிகள் திட்டமிட்டு இவ்வாறான சதித் திட்டங்களைத் தீட்டுகின்றனர் என்பது தெளிவாகின்றது. முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறை என்றே கூறப்படுகின்றது. ஆனால் ஏன் சிங்களக் கடைகளும் தாக்கப்பட வேண்டும்- என்றனர். (த-61)

# சில அதிகார சக்திகளின் ஆதரவுடனே வன்முறை!

## விரைவில் வெளிப்படுத்துவோம் என்கிறார் சபாநாயகர்



கொழும்பு, மே 20

ஒரு சில பிரதேசங்களை மாத்திரம் இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் சில அதிகார சக்திகள் செயற்படுகின்றன. அவை தொடர்பிலான விவரங்களும் இந்த தாக்குதல்களுக்கான காரணங்களும் விரைவில் வெளியாகும்.

இவ்வாறு சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். வடமேல் மாகாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து மினுவாங்கொட பிரதேசத்துக்கு மக்களைச் சந்திக்க சென்றிருந்த சபாநாயகர் கரு ஜயசூரிய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவங்களை தொடர்ந்து நாட்டின் அமைதியை சீர் குலைக்கும் வகையில் இடம்பெறும் சம்பவங்கள் வன்மையாக கண்டிக்கக் கூடியவையாகும். விசாரணைகளின் மூலமாக கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைவாக இந்தத் தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் ஒரு சில அதிகார சக்திகள் செயற்படுவது வெளியாகியுள்ளது. அதற்கான தகுந்த சாட்சிகளும் கிடைத்துள்ளன.

தற்போது அது தொடர்பான தகவல்களை குறிப்பிட முடியாவிட்டாலும் இன்னும் ஒரு சில தினங்களில் அவை தொடர்பான தகவல்கள் வெளியாகும். தற்போதைய நிலைமையில் பாதுகாப்புத் துறையினர் மீது அனைவரும் முழு நம்பிக்கை வைக்க வேண்டியது அவசியமாகும். இந்த சம்பவங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். ஒரு தரப்பு மக்களை குறிவைத்து தாக்கும் இது போன்ற சம்பவங்கள் ஏற்றுக்கொள்ள கூடியவையல்ல. இந்த தாக்குதல்களுக்கான காரணங்களும் கூடிய விரைவில் வெளியாகும். - என்றார். (எ-61)

---



## புதையல் தோண்டிய நால்வர் கைது

கொழும்பு, மே 20

மொனராகவில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட பெண்கள் இருவர் உட்பட 4 பேர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மரகலகந்த பாதுகாப்பு வனப்பகுதியில் மொனராகலை புராதன சொத்துப் பாதுகாப்பு பிரிவினரும் , இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ள்னர்.

கொடியாகல மற்றும் மொனராகலைப் பகுதிகளைச் சேர்ந்த 43,50 ஆகிய வயதுகளையுடைய ஆண்கள் இருவரும் , வெலியாய , கொடியாகல ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 30 , 43 வயதுகளையுடைய பெண்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர்களை மொனராகலை நீதி வான் நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ள பொலிஸார் மேலதிக விசார ணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (எ-71)

---

# நிர்வகிக்கத் தெரியாத அரசு பதவியை விட்டு விலகட்டும்

## வலியுறுத்துகின்றது பெரமுன

கொழும்பு, மே 20

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளோம். அது தொடர்பாகக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என்று அவர் கூறினார். உண்மையில் இது தொடர்பாகக் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டிய அவசியம் இல்லை. வாக்கெடுப்பு நடத்தும் திகதியைச் சபாநாயகரே தீர்மானிக்க முடியும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார். பத்திரமுல்லையில் உள்ள பொது மக்கள் முன்னணி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

அடுத்த நாடாளுமன்றம் அமர்வின்போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தும் தினத்தை சபாநாயகர் அறிவிக்கவேண்டும். நாட்டை முறையாக நிர்வகிக்க முடியாத அரசு பதவி விலக வேண்டும்.

புலனாய்வுப் பிரிவினரால் வழங்கப்பட்ட எச்சரிக்கைத் தகவல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தொடர் குண்டுத் தாக்குதலைத் தடுக்காத அரசு, அதன் பிறகு இடம்பெற்ற விசாரணைகளின் மூலம் பல்வேறு விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டமைக்கு தாம் தான் காரணம் என்று



கூறிப் பாராட்டுப் பெற முயற்சிக்கின்றார்கள். பொலிஸார், இராணுவத்தினர் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினரின் உடனடி நடவடிக்கைகளின் காரணமாகவே தாக்குதலுக்குப் பின்னர் அந்த வலையமைப்பு தொடர்பில் பல்வேறு விடயங்களையும் கண்டுபிடிக்க முடிந்தது.

ஆரம்பத்தில் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அரசு அதன் பின்னரும் பல தடவையாக தமக்குரிய பொறுப்பை முறையாக நிறைவேற்றத் தவறிவிட்டது. அமைச்சர் ரிசாத் பதியுதீன் தொலைபேசியின் ஊடாகத் தொடர்பு கொண்டு பேசியதாக இராணுவத்தளபதி லெப்டினட் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க உறுதிப்படுத்தியிருக்கிறார். கைது செய்யப்பட்டவர்களின் சுகதுக்கம் விசாரிப்பதற்கு அவ்வாறு தொடர்பு கொண்டிருப்பார் என்றுதான் தற்போது கூறவேண்டியிருக்கிறது. அதேபோன்று இரு மாகாணங்களின் ஆளுநர்கள் மீதும் பரவலாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. எனினும் அவர்களிடமிருந்து குறைந்தபட்சம் ஒரு வாக்கு மூலம் கூடப் பெறப்படவில்லை.

தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசின் வரலாற்றைச் சற்றே நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். 1983ஆம் ஆண்டில் புலிகளின் தாக்குதலில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, அவர்களின் பூதவுடல்கள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட உடனேயே அவற்றை அடக்கம் செய்யுமாறு அப்போதைய அரச தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன அறிவித்தார். அதேவேளை பொலிஸாருக்கு விடுமுறை வழங்கிப் பாதுகாப்பைக் குறைத்தார். அதனால் அப்பாவி தமிழ் மக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் அதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு எமக்கு 30 வருடங்கள் தேவைப்பட்டது.

தற்போதும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு அதையே மீண்டும் செய்வதற்கு முயற்சிக்கின்றது. முஸ்லிம்களை இலக்கு வைத்து சில பிரதேசங்களில் நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் அரசால் திட்டமிடப்பட்டதாகும். அதன்மூலம் சிறைபான்மையின மக்களைப் பெரும்பான்மையின மக்கள் தாக்குவதாகக் காண்பித்து, தமது தனிப்பட்ட அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. 10 அரச சார்பற்ற அமைப்புக்கள் இலங்கைக்கு அமைதிப் படையை வரவழைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றன என்று ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. இதுவே அரசின் தேவையாக இருக்கின்றது. - என்றார். (எ-61)

---

# பொறுப்புடன் செயற்படுமாறு ஊடகங்களிடம் வேண்டுகோள்

கொழும்பு, மே 20

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து செய்திகள், அதனுடன் தொடர்புடைய ஒளிப்படங்கள் அல்லது காணொலிகளை வெளியிடுதல் தொடர்பில் ஊடகங்கள் சில விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சில விடயங்களையும் முன்வைத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகமகே ஊடக அமைச்சின் செயலர், தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அரச தகவல் திணைக்களம் என்பவற்றுக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அதில் உள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்ளைத் தொடர்ந்து சில பிரதேசங்களில் ஏற்படுகின்ற வன்முறை சம்பவங்களில் படுகாயமடைந்து பலர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த வன்முறைச் சம்பவங்கள் அடிப்படைவாதிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிய வந்துள்ளது.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்புத் துறை பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. பல சந்தேக நபர்களைக் கைது செய்தும் உள்ளனர். தற்போது நாட்டில் அவசரகால சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக சாதாரண முஸ்லிம் மக்கள் குற்றவாளிகள் போன்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சில விடயங்கள் தொடர்பாக செய்திகளை வெளியிடும் போது ஊடகங்கள் இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆண்ணக்குழு கோருகின்றது.

பொதுமக்கள் மத்தியில் இன அல்லது மத வாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படக் கூடாது என்ற பொறுப்பு எம் அனைவரிடமும் உள்ளது. மக்கள் மத்தியில் குரோதங்களை ஏற்படுத்தும் வகையிலான செய்திகளை வெளியிடாது அல்லது பிரசுரிக்காதிருத்தல், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் நபரொருவரின் மதம் அல்லது அவரது தனிப்பட்ட தகவல்களை வெளியிடாதிருத்தல், வாய்மொழி மூலமாகப் பரப்பப்படுகின்ற உண்மைக்குப் புறம்பான செய்திகளை உறுதிப்படுத்தாமல் வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளல், வன்முறை சம்பவங்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள், உயிரிழந்தவர்களின் சடலங்கள் அல்லது ஒளிப்படங்கள் அல்லது காணொலிகளை ஒளிபரப்பாதிருத்தல், இவற்றை ஒளிபரப்புவதன் மூலம் அல்லது பாதுகாப்புத் துறையினரால் முன்னெடுக்கப்படுகின்ற சோதனை நடவடிக்கைகளின்போது நபரொருவரின் தனித்துவத்தைப் பாதிக்கும் வகையில் செயற்படாதிருத்தல் -என்றுள்ளது. (எ-61)

---

# போரை நோக்கிய பாதையில் அடியெடுத்து வைக்காதீர்கள்!

கொழும்பு, மே 20

நிறுத்த முடியாத ஒரு போரை நோக்கிய பாதையில் மீண்டும் அடியெடுத்து வைக்கமாட்டோம் என்று அனைவரும் உறுதி பூண வேண்டும். எத்தகைய விலை கொடுத்தேனும் வன்முறைக்கு எதிராகச் செயற்படுமாறு அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறும் சமாதானம், அகிம்சை மற்றும் சமத்துவத்துக்கான பெண்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒருமித்த அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் வன்முறையை ஒழிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு எமது பிரதிநிதிகளைக் கோருகின்றோம். ஒரு தேசம் என்ற அடிப்படையில் கடந்த காலத்தில் பல்வேறு துன்பங்களை அனுபவித்தும்கூட இன்னுமொரு கறுப்பு ஜூலை நிகழ்வதைத் தடுக்க முடியாவிட்டால் இதுவரை காலத்தில் நாம் எதனைச் சாதித்தோம் என்றும் கேள்வி எழும்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக நாட்டின் சில பகுதிகளில் வன்முறைகள் வெடித்திருக்கின்றன. தமிழருக்கு எதிராக நிகழ்ந்த 1983 கறுப்பு ஜூலை வன்முறைகளால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. எம்மில் பலர் அதற்கு முகங்கொடுத்திருக்கிறோம். பல்லாயிரம் உயிர்கள் பலியான உள்நாட்டுப் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் வாழ்ந்த கசப்பான அனுபவத்தையும் நாங்கள் கொண்டிருக்கிறோம். 2014ஆம் ஆண்டில் அளுத்கமவிலும், கடந்த வருடம் திகனவிலும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்களின்போது நாங்கள் வெகுவாக அச்சமடைந்தோம்.

எத்தகைய விலை கொடுத்தேனும் வன்முறைக்கு எதிராகச் செயற்படுமாறு அனைவரையும் வலியுறுத்தும் அதே வேளை ஒருமித்த அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் வன்முறையை ஒழிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு எமது பிரதிநிதிகளைக் கோருகின்றோம்- என்றார். (த-61)

## சுயாதீன விசாரணை நடத்திவிட்டு தீர்மானம் கொண்டு வருவதே சரி

### ஐ.தே.க. பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜகருக தெரிவிப்பு



கொழும்பு, மே 20

அமைச்சர் ரிசாத் பதியுதினுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்னர் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முறையான விசாரணைகளுக்குட்படுத்த வேண்டும். அரச தலைவரின் பொறுப்பாக்கத்தின் கீழே சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு காணப்படுகின்றது. அதனால் விசாரணைகளுக்குரிசாத் பதியுதீனின் தரப்பில் இருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று ஒருபோதும் கூற முடியாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருக தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை.

இந்தநிலையில் அந்தக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பிரான ஹர்ஷன ராஜகருக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களுடன் தொடர்புகளை அமைச்சர் ரிசாத் பதியுதீன் கொண்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டியே எதிர்த் தரப்பினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பித்துள்ளனர்.

ஒரு குற்றஞ்சாட்டு காணப்படும்போது சுயாதீன விசாரணைகள் உரிய தரப்பால் முன்னெடுக்கப்பட்டுவதே முறையாகும்.

குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளமுன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டும் எனில் நாடாளுமன்றத்தில் தற்போது உள்ள பெரும்பாலான உறுப்பினர்களுக்கு எதிராக தினமும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர வேண்டும். சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் எந்தளவுக்கு உண்மை தன்மை வாய்ந்தது என்று அனுமானத்தில் ஒருபோதும் குறிப்பிட முடியாது. எதிர்தரப்பினர் அரச தலைவருடன் மிகவும் நெருக்கமாகச் செயற்படுகின்றார்கள். சட்டம் ஒழுங்கு அமைச்சு அரச தலைவரின் பொறுப்பாக்கத்தின் கீழ் காணப்படுகின்றது. அவரால் முறையான விசாரணைகளை முன்னெக்கப் பணிப்புரை விடுக்க முடியும்.

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதார பூர்வமாக உண்மையென்று சுயாதீனமான விசாரணைகளின் ஊடாக நிரூபிக்கப்பட்டால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெறும்.

கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த விடயம் தொடர்பில் மாறுப்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. ஒரு குறுகிய நிலையில் இருந்து அரசியல் தீர்மானங்களை எடுப்பதை காட்டிலும் அனைவரும் ஒருமித்துப் பாதிப்புக்கள் இல்லாத தீர்வை எட்டுவது அவசியமாகும். - என்றார். (எ-31)

## குண்டுத் தாக்குதல்களைக் கூறி தேர்தலை பிற்போட வேண்டாம்

### பொதுமக்கள் முன்னணி வலியுறுத்துகின்றது



கொழும்பு, மே 20

அரச தலைவர் தேர்தலைப் பிற்போடுவதற்கு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை அரசு பயன்படுத்தக் கூடாது. அரசமைப்பை மீறித் தேர்தலைப் பிற்போட நாம் இடமளிக்கப் போவதில்லை என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தவிசாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

தேர்தலைப் பிற்போடுவதற்கு முயற்சித்தல் அல்லது அரசின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கூறியிருக்கின்றார். மக்களின் ஜனநாயக உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கும் இத்தகைய செயற்பாடுகள் குறித்து அரசு நினைத்தும் பார்க்கக் கூடாது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து தற்போது நாட்டில் பெரும் சிக்கல் நிலையொன்று ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் வெகுவாக அச்சமடைந்திருக்கின்றார்கள். இந்த நிலையிலிருந்து மக்கள் மீட்டெடுப்பதற்கு அவர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். ஒட்டுமொத்த நாட்டையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசிடம் முறையான திட்டமிடலொன்று இருக்க வேண்டும். மக்களை பழைய நிலைக்கு திருப்புவதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கும் அதே வேளை, பன்னாடுகளுடன் தொடர்புகளைப் பேணும் வகையில் மற்றொரு திட்டமும் அவசியமாகும்.

தொடர் குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் சுற்றுலாத்துறை சார்ந்த இணைத்தளப் பக்கங்கள் மற்றும் வெளிநாட்டு அரசுகளின் பயண அறிவுறுத்தல்கள் அனைத்தும் தற்போது இலங்கைக்குச் செல்வது பொருத்தமற்றது என்ற கருத்தையே முன்வைத்திருக்கின்றன.

இந்த நிலையில் நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசு கூறுகின்றது. ஆனால் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தான் அலுவலகத்திற்கு வராமல் தனது இல்லத்திலிருந்தே உத்தியோகபூர்வ வேலைகளைக் கவனித்துக்கொள்கின்றேன் என்று கூறுகின்றார். இந்த அரசு கடந்த காலத்திலிருந்து பாடம் எதனையும் கற்றுக் கொள்ளவில்லை. மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு அரசுக்குள் ஒரே தொனியில் பேசுகின்ற, கூறுவதை செயற்படுத்துகின்ற தலைவரொருவர் இருக்க வேண்டும். அந்தத் தலைமைத்துவம் முழு அரசையும் பிரதிநிதித்துவம் செய்வதாக அமைய வேண்டும். ஆனால் தற்போதைய அரசில் அப்படியொரு தலைமைத்துவம் இல்லை. யாரையும் குறைகூறும் நோக்கத்தில் இதனைக் குறிப்பிடவில்லை. ஆனால் நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக இது போன்றதொரு பலவீனமான நிலையொன்று ஏற்பட்டிருப்பது மிகுந்த கவலைக்குரிய விடயமாகும். - என்றார். (எ-61)



துணை மருத்துவ சேவை அலுவலர்களுக்கான நியமனக் கடிதங்கள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் ஆகியோரால் அமைச்சில் வைத்து கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று வழங்கப்பட்டன. (ம)

## நாட்டில் அமைதியை பேண எதிர்க்கட்சி ஒத்துழைக்கும்

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, மே 20

இலங்கையில் அமைதியைப் பேணுவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்க்கட்சி ஆதரிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஜேர்மனியிடம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவர் ஜோன் ரோட், மகிந்த ராஜபக்சவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போது இலங்கையின் தற்போதைய நிலவரம் பற்றி அவர் ஆராய்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

"நாட்டின் தற்போதைய நிலமை குறித்து கலந்துரையாடினோம். கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பில் ஜேர்மன் தூதுவர் கவலை வெளியிட்டார். தற்போதைய நெருக்கடியை வெற்றி கொள்வதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்" என்று மகிந்த ராஜபக்ச விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரென்ற வகையில் நாட்டின் தற்போதைய பிரச்சினைக்கு முடிவைக் கண்டு இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்குத் தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு எதிரணி உறுதியளித்துள்ளது என்று மகிந்த ராஜபக்ச ஜேர்மன் தூதுவரிடம் தெரிவித்தார்.

அரச தலைவரிடமும், தலைமை அமைச்சரிடமும் இதனையே நாம் கூறியிருக்கின்றோம். வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்த்து அமைதி காக்க வேண்டும் என்று பொதுமக்களிடம் நாம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம் என்றும் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கையிலுள்ள யுனிசெப் பிரதிநிதி டிம் சட்டெனும் ராஜபக்சவைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார். நாட்டின் நிலவரம் தொடர்பாக ராஜபக்சவுடன் கலந்துரையாடிய அவர் நாட்டில் வழமை நிலையைக் கொண்டுவரும் முகமாக பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோரை ராஜபக்ச ஊக்குவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-61)

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தால் பயனேதுமில்லை

### அமைச்சர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, மே 20

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதே தற்போது நாட்டின் தேவையாக உள்ளது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் இவ்வாறு தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என்று வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பயங்கரவாதமற்ற சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. நாம் தற்போது கவனம் செலுத்துகின்ற புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் முயற்சியின் போது மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பவற்றை முழுமையாக பாதுகாக்க முடியாது. தற்போது நாட்டின் தேவை தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதேயாகும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் மனித உரிமைகளையோ , ஜனநாயகத்தையோ பாதுகாக்க முடியாது. கடந்த 30 ஆண்டு காலமாக இடம் பெற்ற உள்நாட்டுப் போரை தோல்வியடையச் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பலப்படுத்த வேண்டும். அத்தோடு ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்காக தேசிய ஒழுங்கு பத்திரத்தை சற்று புறந்தள்ளி தேசிய பாதுகாப்புக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்த வேண்டும்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் ஜனநாயகத்தையோ அல்லது மனித உரிமைகளையோ பெற முடியாது.

ஆனால் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. எனவே அதனைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும். - என்றார். (எ-61)

நாட்டில் உள்ள அசாதாரண நிலையால்

# மரக்கறிகளின் விலையில் விரைவில் வீழ்ச்சி ஏற்படும்

## விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னும் சில வாரங்களில் வாழைப்பழம் உட்பட சில மரக்கறி வகைகளின் விலையில் வீழ்ச்சி ஏற்படும். இதனால் பெரிய நட்டம் ஏற்படும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூர் சந்தைகளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலையில் பழங்கள், மரக்கறி வகைகள் விற்கப்படுகின்றன. இதற்கு காரணம் ஒரே தடவையில் ஒரே பயிரை பயிரிட்டு அறுவடை செய்வதனால் உற்பத்தி அதிகமாக இருக்கும். ஆகவே கேள்வி குறைவாக இருக்கும். இதனை கருத்தில் கொண்டு தம்புள்ள சந்தையில் மொத்தமாக தமது உற்பத்திகளை விற்பனை செய்வது யாழ்ப்பாண விவசாயிகளிடம் வழக்கமாக இருந்து வருகிறது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக பாதுகாப்புப் பிரிவினர் பல இடங்களில் வாகனங்களை மறித்து முழுமையான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வாகனங்களில் பயணிப்பவர்களை கீழே இறக்கி அவர்கள் உடமைகள் முழுமையாக இறக்கி சோதனையின் பின்னரே அனுப்பி வைக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ள சந்தைக்கு மரக்கறிகளைக் கொண்டு செல்வதற்கு சுமார் 7 சோதனை செய்யும் இடங்களைத் தாண்டிச் செல்லவேண்டி இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் மரக்கறி மூட்டை மற்றும் வாழைக்குலைகள் இறக்கி ஏற்றும்போது அவை நசுங்கி விடும். அத்துடன் களைப்பும் ஏற்படும். தம்புள்ள சந்தையை அடையும்போது மரக்கறி மற்றும் பழங்களின் தரம் குறைந்து செல்கிறது. இதனால் பாதி விலையில் அங்கு கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். தக்காளிப்பழம் மற்றும் பூசணிக்காய் போன்றவை கால் விலைக்கு கூட விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த அசாதாரண நிலை தொடருமானால் இன்னும் சில வாரங்களில் மரக்கறிகள், பழங்களின் விலை வெகுவாக குறைந்துவிடும் - என்றனர். (ம-7)



## வலி. மேற்கு சபையில் 10ஆவது நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 20

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் மெழுகுவர்த்தி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபையின் 15 ஆவது சாதாரண கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அனைவரும் இணைந்து தமது கைகளில் மெழுகுவர்த்தி சுடர் ஏந்தி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செய்தனர். (த)



## கூட்டமைப்பின் நினைவேந்தல் ஆரையம்பதியில் இடம்பெற்றது

மட்டக்களப்பு, மே 20

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு ஆரையம்பதி சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறி நேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன்.செல்வராசா, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் கி. துரை ராசசிங்கம், பிரதித் தவிசாளர் இ.பிரசன்னா, உறுப்பினர்களான மா.நடராசா, கோ.கருணாகரம், இரா.துரைரெத்தினம், மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சியின் ஆதவாளர்கள், இளையோர் முன்னணியினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். முள்ளி வாய்க்காலில் உயிர் நீத்த உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காக சிறப்பு வழிபாடுகள், பஜனைகள் இடம் பெற்றன. தொட ர்ந்து ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலியுடன் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது. (த)

## அபிவிருத்தி அலுவலர்களுக்கு கிராமசக்தி கலந்துரையாடல்

சாவகச்சேரி, மே 20

பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர்களுக்கான கருத்தமர்வொன்று தென்மராட்சியில் நேற்று இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் குறித்த கருத்தமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராம சக்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கிராம அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவே ,அந்தக் கருத்தமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. தென்மராட்சிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்தக் கருத்தமர்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார், தென்மராட்சி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (ம-21.9)

## கிழக்குப் பல்கலைக் கழக கற்றல் நடவடிக்கை நாளை

யாழ்ப்பாணம், மே 20

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் நாளை செவ்வாய்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

கற்றல் நடவடிக்கைகள் தமிழ் சிங்கள புத்தாண்டு விடுமுறையின் பின்னர் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் கடந்த மாதம் 21ஆம் திகதி ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிப்பது பிற்போடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக வளாகம் பாதுகாப்புத் தரப்பினரால் சோதனையிடப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து நாளை செவ்வாய்கிழமை தொடக்கம் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## வீதி சீரமைப்புப் பணிகள் இனிமேல் சனசமூக நிலையங்களுக்கு இல்லை

### சாவ.நகர சபையில் தீர்மானம்

சாவகச்சேரி, மே 20

இனிவரும் காலங்களில் சனசமூக நிலையங்களிடம் உட்கட்டுமான வேலைகள் தவிர்ந்த வீதிச் சீரமைப்புப் பணிகள் எவையும் வழங்குவதில்லை என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு கடந்த வியாழக்கிழமை தவிசாளர் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது சபை உறுப்பினர் க.தர்சன் முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்து உரையாற்றினார்.

அந்த உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

சாவகச்சேரி நகரசபையால் பராமரிக்கப்படும் சனசமூக நிலையங்களிடம் உட்கட்டுமான வேலைகள் தவிர்ந்த வீதிச் சீரமைப்புப் பணிகள் எவையும் வழங்கக் கூடாது. அவ்வாறு வழங்குவதாயின் அவர்களின் நிதி நிலை சபையின் சனசமூக அபிவிருத்தி அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வழங்க வேண்டும்.

சனசமூக நிலையங்களின் மேம்பாட்டுக்காகவே அபிவிருத்தி வேலைகளை நிலையங்கள் ஊடாக மேற்கொள்ள வேண்டுமென சபையில் தீர்மானிக்கப்பட் டது. ஒப்பந்தம் செய்யும் சனசமூக நிலையங்கள் அவற்றைச் சிறிய தொகையைப் பெற்றுக் கொண்டு உப ஒப்பந்ததாரரிடம் கொடுத்துவிடுகின்றனர். இதனால் தரமான வீதியை பயன்படுத்த முடியவில்லையென மக்கள் கவலை தெரிவிக்கின்றனர் -என்றார்.

இதனை ஏனைய உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டதால் வருங்காலத்தில் வீதிச் சீரமைப்பு வேலைகள் சனசமூக நிலையங்களுக்கு வழங்குவதில்லை என முடிவு செய்யப்பட்டுத் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, மே 20

வீதிவிபத்துச் சம்பவம் ஒன்றில் சிக்கி ஈருருளியில் பயணித்த ஒருவர் படுகாமடைந்தார். இந்தச் சம்பவம் நாவற்குழிப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவு தினமான நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றது.

முச்சக்கர வண்டி ஒன்று அவரை மோதித் தள்ளியது என்று தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் காயமடைந்தவர் நாவற்குழி, 300 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த லட்சுமணன் அழகுராசா (வயது 49) எனக் கண்டறிப்பட்டார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அழகுராசா மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டனர். (ம-21.9)



வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தால் நேற்றுமுன்தினம் இனிப்புப் பானங்கள் வழங்கப்பட்டன. (106)

# கண்ணகை அம்மன் ஆலய

# பொங்கல் சிறப்பிதழ் 20.05.2019

## ல் விளக்கெரியும் வற்றாப்பளை அம்மன்............

, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வற்றாப்பளை என்னும் ஊரில்
ன வீதியிலிருந்து கிளை பிரிந்தமைந்துள்ள இரு பிரதான வீதிகளால்
படி பாதையாகவும் மற்றையது முள்ளியவளை அம்மன் சக்தி என
மல் தூரம் சென்றால் பிரதான வீதியிலிருந்து கோயிலை அடையலாம்.
_ முதலிய மரச் சோலைகளும் நிறைந்த மணல் பரப்பில் ஒரு சோலை
றுக்கள் சூழ்ந்துள்ளமை இந்தக் கோயிலுக்கும் கிராமத்துக்கும் அழகு
தாவது தங்குமிடமே மருவி வற்றாப்பளை ஆகிய வரலாறு இந்தக்
ஆம் ஆண்டு பங்குனி மாதம் தமிழ் திகதி 6 அன்று இந்தக் கோயில்
 இடைச் சிறுவர்களுக்கும் அம்பாள் நேரில் காட்சி கொடுத்து தனக்கு
சிறுவர்களுக்கும் பால் அமுது பொங்கலிட்டு படைக்கின்றனர். விளக்கு
அந்தச் சிறுவர்களுக்கு கோயில் முகப்பில் காணப்படும் நந்திக் கடல்
க்கு விளக்கு ஏற்றி வைப்பாயாக'' என்று கூறுகின்றார். கடலிலிருந்து
றது. கடல் நீரில் விளக்கு எரிகிறது. படையல் நடக்கிறது. இடைச்
ளை மூதாட்டி தனது தலையை மயிர் வகிர்ந்து பேன் எடுத்து விடுமாறு
. சற்று நேரத்தில் கிழவி மறைந்து விடுகிறாள் யாவரும் அதிசயிக்கின்ற
படும் சிறுகடல் தான் நந்திக் கடல் என்னும் நாமம் கொண்டது. இந்த
கவுள்ளது. மாடுகள், ஆங்காங்கே மேய்ந்து நிற்கும் வயல் வளம், கடல்
ட்ட ஆழத்தில் கிணறு தோண்டி நீர் பெறும் வாய்ப்பினை இந்தக் கிராம

, தெய்வீகம் நிறைந்த கதையாக இங்கு கூறப்படுகிறது. மானிடக்
ழிபாட்டின் மகத்துவம் மிக்க தேவியாகவும் காணப்படுகிறாள். புனிதம்
ர் வெற்றிவேலன் என்றழைக்கப்படும் வெற்றிவேல் புலவர் ஆவார்.
தற்கு முன்னுள்ள ஒரு வாரகாலத்திலும் இந்த சிலம்பு கூறல் கோயிலில்
கேட்போர் இல் வாழ்வில் செல்வம் சிறக்க வாழ்கிறார்கள், அம்பாளின்
கதையை தொகுத்தளித்த அறிஞர்களுக்கும், ஆர்வலருக்கும், என்றும்

கிடைக்கும். வெற்றி வேற்புலவர் வட இலங்கையைச் சேர்ந்தவர் என்று அறியக் கிடக்கிறது. இந்தக் காவியத்தில் கண்ணகையாரின் கதையில் சொற் சுவை, பொருட்சுவை, வர்ணணைகள், காதல், வீரம், சோகம், சிருங்காரம், பக்திப் பரவசம் உள்ளிட்ட நவரசங்களையும் இணைத்த ஒரு பெருஞ் சிறப்புக் காணப்படுகிறது.

''உறைந்திடத்தில் காண் சோழ நகர்
உற்று வந்தேன் கதிர்காமம்''என்பது சிலம்பு கூறலில் கண்ணகையார் கூறிய வந்துள்ளேன் என் பதைக் கண்ணகையார் விளக்குகிறார்.

''வைகாசித் திங்கள் விசாகம் கூடிய பூரணையில் வருவேன் ஒரு நாள்'' எனவும் கண்ணகையார் கூறியமை இங்கு நோக்கற் பாலது, இதன்படியே வைகாசி மாதம் விசாகம் கூடிய பூரணை நிலவில் வருடாந்த பொங்கல் உற்சவம் கொண்டாடப்பட்டு வருகின்றது. கதிர்காமக்கரை யாத்திரை செல்லும் அடியார் கூட்டம் இந்த தலத்திலிருந்தே தமது யாத்திரையை ஆரம்பிப்பர், அதுவே முறையாக அமைந்த தல யாத்திரையாகும். எனவே கதிர்காமக் கரை யாத்திரையுடன் நீண்டகாலமாக இந்த திருத்தலம் தொடர்பட்டுள்ளமை சிறப்பாகும்.

பொங்கலுக்கு முன்னுள்ள சோமவார தினமன்று அம்பாள் தீர்த்தம் எடுக்கப்படும். கோயிலிலிருந்து பல மைல் தூரத்திலமைந்துள்ள சிலாவத்தைக் கடலில் தீர்த்தம், கிரியா கரும முறைப்படி எடுக்கப்படும். இந்தத் தீர்த்தமானது 'தீர்த்தக் குடம்' என சிறப்புப் பெற்று முதலாவதாக சிலாவத்தையில் உள்ள தற்காலிக கடல்கரை ஆலயத்தில் இறக்கி வைத்து இளைப்பாறி பூசை வழிபாடாற்றப்பட்டு சிலாவத்தையிலுள்ள அம்மன் ஆலயத்தில் இறக்கி வைத்து பூசை வழிபாடாற்றப்பெற்று மூன்றாவதாக, புதறிமுடா எனுமிடத்திலுள்ள ஓர் பந்தலில் இறக்கப்படும், இந்தப் பந்தல் அதற்கென அமைக்கப்பட்டது. அங்கு அடியவர் இளைப்பாறிய பின் இந்தத் திருக்குடமானது பவனியாக இந்தக் கோயிலுடன் தொடர்புபடும் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு இந்தந் தீர்த்தக் குடத்தில் உள்ள கடல் நீரினை நெய்யாகப் பாவித்து விளக்குத் திரியிட்டு விளக்கு எரியும் அதிசயம் இன்றும் நடைபெறுகிறது. தொடர்ந்து ஏழு நாள்களாக இந்த விளக்கு காட்டா விநாயகர் ஆலயத்தில் எரிந்து கொண்டிருக்கும்,



கண்ணகை அம்பாள் பொங்கலன்று அதிகாலையில் தீர்த்தக்குடம், மடைப் பண்டங்களுடன் வற்றாப்பளை கண்ணகையார் திருத்தலத்துக்கு எடுத்துச் செல்லப்படும். ***********


நியூ உதயா ஜுவல்லர்ஸ்
உங்கள் வாழ்க்கையின் அழகான தருணங்கள் எங்கள் தங்கத்தில் மிளிரட்டும்.
Dealers in Genuine Ornaments
New Uthaya Jewellers

No.91 Power House Road, Jaffna. 021 222 2031

பொதிகை மல்ரி சென்ரர்

புதுக்குடியிருப்பு சந்தி, புதுக்குடியிருப்பு.
Puthukkudiyiruppy Junction, Puthukkudiyiruppy

Vino Book Center
Books, Stationaries,
News Papers,
Colour Printing,
Photocopying,
Fax, Laminating,
Scanning, Notice,
Bill Payments,
eZ Cash, Mobile Reload,
Advertisements
(Virakesari, Valampuri)

Post Office Road, Mullaitivu,
Sri Lanka.
E-mail:vinobookcenter@gmail.com
T-(+94) 21 2 290 280
(+94) 77 99 8 99 11
www.facebook.com/vinomullai

துஷான் போன் சொப் & இலத்திரனியல்
THUSHAN PHONE SHOP
எம்மிடம் சன் டிரக்ட் டிஸ் டீவிக்கான ரீசார்ஜ் செய்து கொள்ளலாம்.

பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.
Paranthan Road, Puthukkudiyiruppu
T-0779126977

K.T.S. Class Center
அலுமினியம் பிற்றிங் வேலைகள் செய்துகொடுக்கப்படும்.
Alumex Dealers

அலுமினியம் பிற்றிங்.
கண்ணாடி.
Level Seets மற்றும்
படவகைகள் என்பவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.
T-077 2428 483

# அரசியல் பழிவாங்கல் மேற்கொள்ளவில்லை

## மகிந்தானந்த கூறுகின்றார்

கொழும்பு, மே 20

வணிக கைதொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரசியல் பழிவாங்கல் இல்லை. அது தேசிய பாதுகாப்புக்காகவே கொண்டுவரப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறி லங்கா சுதந்திரக் கட்சி , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களதும் வாக்குகளுடன் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும்

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சர் ரிசாத் பதியுதீனை அரசியல் ரீதியான பழிவாங்குவதற்கான எந்த தேவையும் எமக்கு கிடையாது. நூற்றுக் கணக்காக அப்பாவி பொது மக்களின் உயிர்களை பலியெடுத்த இஸ்லாம் அடிப்படைவாதிகளின் தற்கொலை குண்டு தாக்குதல்களுக்கும் இவருக்கும் தொடர்பு இருப்பதாக பரவலாகக் கூறப்படுகின்றது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடைக்கால அரசு அமைத்த போது இவர்கள் இணைந்து ஐ.தே.கவை பாதுகாத்ததால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அரசியல் பழிவாங்கல் எனக் கூறி திசை திருப்ப முயற்சிக்கின் றனர்.

மனச்சாட்சியுடைய ஐக்கிய தேசியக் கட்சியினதும், தமிழ் தேசிய கூட்ட மைப்பினதும் கத்தோலிக்க உறுப்பினர்கள் இதற்கான ஆதரவை வழங்குவதாகத் உறுதியளித்துள்ளனர். சிறி லங்கா சுதந்திர கட்சியும் இந்த விடயத்தில் ஆழமாக சிந்தித்து சாதகமான தீர்மானத்தை எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய சகல குற்றச்சாட்டு களும் ஆதரங்களுடனேயே முன்வை க்கப்பட்டுள்ளன. சபாநாயகர் கருஜய சூரிய ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பவர் என்ற ரீதியிலும், குற்றங்களுக்கு துணை போகாதவர் என்ற ரீதியிலும் இந்த விடயத்தில் பக்கச்சார்பின்றி நடக்க வேண்டும். என்றார். (எ-61)

# தமிழரின் போராட்டத்தில் நியாயம் இருந்ததென பேரினவாதிகள் ஏற்பு

## கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 20

தமிழின விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் நியாயம் இருந்தது என்று சிங்களப் பேரினவாதிகளே தற்போது கூறும் நிலமை ஏற்பட்டிருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் நடத்திய கொள்கையற்ற தாக்குதல்களுக்கும் விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கும் பெருமளவு வேறுபாடுகள் உள்ளன என்று சிங்களத் தலைவர்களே தற்போது கூறுகின்றார்கள், அதை ஏற்றுக் கொள்கின்றார்கள்.

எனினும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் செயற்பாடுகளால் சிரியா, ஈராக் நாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற நிலைமை போன்று இலங்கையிலும் வரமுடியாது. அவ்வாறு இலங்கை வருவதற்கும் இடமளிக்கமுடியாது. அவ்வாறு இலங்கை வருவதென்பது எல்லோரையுமே பாதிக்கும்.

இலங்கையில் கடந்தமாதம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் சம்பவங்களைப் பார்த்தால் ஒரு கொள்கைக்காக அல்லது தேவைக்காக நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை. உலகம் முழுவதும் மட்டுமல்லாது நாட்டில் இருக்கிற ஒவ்வொருவரும் இது முற்றுமுழுதாக ஒரு பயங்கரவாதச் செயலாகவே சொல்கின்றார்கள்.

முஸ்லிம் தலைவர்களே இதுவொரு பயங்கரவாதச் செயல் என்று இதனைச் சொல்கின்றார்கள். ஏனென்றால் ஒரு கோரிக்கையின் அடிப்படையில் இந்தப் பயங்கரவாதச் செயல்களைச் செய்யவில்லை. அதனால் தான் இவ்வாறான சம்பவங்களையும் இதில் ஈடுபட்டவர்களையும் அந்த மக்களும் எதிர்க்கின்றனர்.

மிகப் பெரிய சிங்களபேரினவாதிகளே, அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் நியாயம் இருந்தது என்று சொல்கிறார்கள்.

எனினும், இந்தத் தாக்குதல்கள் முழுமையான பயங்கரவாதச் செயல் தான். ஆக இதைக் கட்டுப்படுத்தாமல் விட்டால் உலகளாவிய ரீதியில் நடந்துகொண்டிருப்பதுபோல் இங்கும் ஏற்படலாம். ஆகையால் சிரியா அல்லது ஈராக் போல இலங்கை வரமுடியாது. அவ்வாறு வருவதற்கு நாங்கள் கூட அனுமதிக்கமுடியாது. அவ்வாறு வருவதென்பது எல்லோரையும் பாதிக்கும். அது எங்களையும் பாதிக்கும்.

ஆகவே அப்படியான நிலைமை ஏற்படாமல் அதை ஆரம்பத்திலே கட்டுப்படுத்துவது மிக முக்கியம். அப்பாவி மக்களைப் பாதிக்காத வகையில் இதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கவேண்டியது அவசியம். குறிப்பாக எங்களுடைய போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது போராளிகள் மிகமிகக் குறைவு. ஆனால் அனைத்து மக்களையும் போராளிகளாகவே பார்க்கின்ற நிலைமை தான் இருந்தது. ஆகையால் மக்கள் பெரியளவிலே பாதிக்கப்பட்டார்கள்.

ஆனால் இன்று இந்தச் சம்பவங்களில் மிகக் குறைவான ஏறக்குறைய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களைச் சுற்றியிருந்தவர்களும் தான் இருந்திருக்கிறார்கள்.

ஆவ்வாறு இருந்தும் முஸ்லிம் மக்கள் பெரியளவில் பாதிக்கப்படுகின்றார்கள். அது சரியா பிழையா என்ற வாதம் இருக்கலாம். ஆனாலும் பயங்கரவாதச் செயல்களைக் கட்டப்படுத்தவேண்டியது கட்டாயம். அதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் செயற்பட்டுக் கொண்டிருந்தால் தான் முடியும் - என்றார். (த-ரி1)

# மதவாத சிந்தனையை அழிக்கும் பொறுப்பு அனைவருக்குமுண்டு

## பாக்கீர் மாக்கார் தெரிவிப்பு

கொழும்பு, மே 20

ஈஸ்டர் ஞாயிறு குண்டுதாரி களையும், அவர்களது வலையமைப்பையும் முழுமையாகக் கண்டறிந்து நிர்மூலம் செய்தாலும் கூட மதத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த இஸ்லாமிய மதவாத சிந்தனையை முழுமையாக இல்லாதொழிக்கும் பொறுப்பு முஸ்லிம் சமூகத்துக்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் உள்ளது.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தேசிய ஊடக நிலையத்தின் தற்போதைய தலைவருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகின் பலம் வாய்ந்த ஊடகங்கள் பலவும் இஸ்லாமியர்களை தாடி வளர்த்து, கையில் துப்பாக்கி வைத்திருக்கும் தீவிரவாதி களாகவே சித்தரிக்கின்றன. புள்ளி விவரங்கள் முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்று குறிப்பிடாத போதிலும், ஊடகங்கள் இஸ்லாம் தீவிரவாதப் போக்குடையது என்ற பிம்பத்தை யே வழங்குகின்றன. தற்போது அத்தகைய சவாலை எமது நாட்டிலும் எதிர்கொள்ள வேண்டிய நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

இதற்கு முகங் கொடுத்து, மதவாதத்தை முழுமையாகத் தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

இந்தத் தருணத்தில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றுகின்ற அனைவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். மாறாக நாட்டின் தற்போதைய சூழ்நிலையின் ஆழத்தை நன்கு புரிந்துகொண்டு, நாட்டைப் பலப்படுத்தும் நோக்கில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்-என்றார். (எ-61)

*அரசியல் கைதிகளை விடுவிக்க*

# அரசதலைவர் சிறிசேனவுக்குள்ள இறுதிச் சந்தர்ப்பம் வெசாக்தான்

## சிவமோகன் எம்.பி. கூறுகிறார்

மன்னார், மே 20

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு இந்த வெசாக் தினமே மைத்திரிக்கு இறுதிச் சந்தர்ப்பம். எனவே தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்கை அவர் நிறைவேற்ற வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் வேண்டுகோள் விடுத்தார்.

அரசதலைவர் மைத்திரிபால சிரிசேனவை அரசதலைவராக வெற்றிபெற வைத்ததில் தமிழ் மக்களும் அவர்களின் ஏக பிரதிநிதிகளாக இருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் மைத்திரிபால தமிழர்களுக்காக வழங்கிய வாக்குறுதிகளில் மிகவும் முக்கிய பங்கு வகிப்பது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயம்.

அரசதலைவரின் பதவிக்காலம் முடிவுறும் நிலைக்கு வந்த போதும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியம் இல்லாமல் போனது ஏன்?. இது பற்றித் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனிடம் கேட்டபோதே அவர் தெரிவித்ததாவது:

அரசதலைவர் தமிழ் மக்கள் மீது பற்றுள்ளவர் போன்ற முகமூடி அணிந்து தமிழ் மக்களின் வாக்குகளை நயவஞ்சகத் தனமாக பெற்றுக் கொண்டு ஆட்சிப் பீடம் ஏறியவர். அவர் எமக்கு அளித்த வாக்குகளில் மிக முக்கியமானது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை. ஆனால் இதுவரை தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை, இது கவலைக்குரிய விடயம். பலர் தேவையற்ற விதத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படாமல் கூட தற்போதும் சிறையில் வாடி வருகிறார்கள். தமிழ் இளைஞர்களுக்கு புரியாத மொழியாகிய சிங்களத்தில் எழுதி பொய்யான வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொண்டு அவசரகாலச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக்கி பல வருடங்களாகச் சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருப்பது இன நல்லிணக்கத்துக்கு நல்ல விடயம் அல்ல. எனவே தமிழ் மக்கள் உங்களை நம்பித்தான் வாக்களித்திருந்தார்கள். அந்த நம்பிக்கையைக் கெடுக்காத விதத்தில் தமிழ் அரசியல் கைதிகளை எந்த ஒரு நிபந்தனைகளும் இல்லாமல் விடுவிக்க வேண்டும். இது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கையாக இருக்கிறது.

இந்த அரசியல் கைதிகளை விடுவிக்காவிட்டால் இந்த நம்பிக்கைத் துரோகத்துக்கு எதிர்வரும் தேர்தல்களில் தமிழ் மக்கள் உரிய பதில்களை உரிய விதத்தில் வழங்குவார்கள் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

**அப்பாவிகள் என்பதற்கு அஜந்தன் உதாரணம்**

இலங்கைச் சிறைகளில் வாடும் இளைஞர்கள் அப்பாவிகள் என்பதற்கு உதாரணம் தான் முன்னாள் போராளி அஜந்தனின் கைது.

கடந்த மாவீரர் தினத்தின் போது வவுனதீவில் இரண்டு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டதில் தீர விசாரிக்காமல் சந்தேகத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான முன்னாள் போராளியைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். பின்னர் அந்தக் கொலையை செய்தது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு என்பது நிரூபிக்கப்பட்டதும் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வாறுதான் தமிழர்கள் காலம் காலமாக இலங்கை அரசால் வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே அனைத்து அரசியல் கைதிகளையும் அவர்கள் எந்த விதத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் அது அநீதியானது என்பதை ஏற்றுக்கொண்டு உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசதலைவர் இந்த வெசாக் தினத்தையும் கைவிடுவாரானால் தமிழ் மக்களின் முன் முத்திரை குத்தப்பட்ட இனவாதியாக அடையாளம் காட்டப்படுவார் என்பது மறுக்க முடியாத செய்தியாக அமையும் - என்றார். (த-213)

# அரசும் அரசுக்கு முண்டுகொடுப்போரும் வன்முறைகளுக்குப் பொறுப்பேற்கவும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கூறுகிறார்

முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு அரசும், அரசுக்கு முண்டுகொடுக்கும் தமிழ், முஸ்லிம் தலைமைகளும் பொறுப்பேற்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) உதயன் நினைவேந்தல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட வகையில் தெற்கில் வன்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற ஐ.எஸ் தீவிரவாத தாக்குதல் நடைபெற போகின்றது என்று உலகத்துக்கே தெரியும். அதை இந்த அரசு கண்டு கொள்ளாமல் இருந்தது மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனக் கலவரத்திலும்கூட அரசுடன் நேரடியாகச் சம்மந்தப்பட்டுள்ள அரசியல்வாதிகள், பாதுகாப்புத் தரப்பினர் உள்ளனர் என்று பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் வாக்குமூலங்களில் தெரியவருகிறது.- என்றார். (த-110)

# பெண் ஒருவர் கைது

கொழும்பு, மே 20

புத்தளத்தில் இரு தேசிய அடையாள அட்டைகளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேச செயலகம் ஒன்றுக்கு அருகில் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது அவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணிடம் சோதனை செய்யப்பட்டபோது அவர் ஒரு அடையாள அட்டையைக் காண்பித்தார் என்றும், பெண்ணின் பையைச் சோதனை செய்தபோது இன்னொரு அடையாள அட்டை கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்றும், விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-71)

## ஆசியாவில் முதல்முறை
# தன்பால் திருமணத்துக்கு தைவான் அனுமதித்தது!



தாய்பெய், மே 20
தன்பால்திருமணத்துக்குஅனுமதி வழங்கியது தைவான் அரசு. ஆசிய நாடொன்றில் தன்பால் திருமணத்துக்கு அனுமதி வழங்கிய முதலாவதுநாடாகதைவான்மாறியது.

அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொள்ள சட்ட அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள நிலையில் கிழக்காசியாகண்டத்தில்உள்ளநாடுகளில் ஒன்றான தைவானிலும் இந்த கோரிக்கைசமீபகாலமாகவலுத்து வந்தது.

இதுதொடர்பாக, அந்த நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் ஓரின ஈர்ப்பாளர்கள்திருமணம்செய்துகொள்வதை அங்கீகரிக்கும் வகையில் மே 24ஆம் திகதிக்குள் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என இரண்டாண்டு கெடு விதித்து கடந்த 2017ஆம் ஆண்டில் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதுதொடர்பாகதைவான்நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று மசோதாக்கள் மீது கடந்த சில நாள்களாக விவாதம் நடைபெற்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஓரின ஈர்ப்பாளர்கள் திருமணம் செய்து இணைந்து வாழ்வதற்கு ஆதரவாக 66 எம்.பி.க்களும், எதிராக 27 எம்.பி.க்களும் வாக்களித்தனர்.

இதன் மூலம் ஆசிய கண்டத்தில் முதல்முறையாகஓரினஈர்ப்பாளர்கள் திருமணம் செய்து கொள்வதை அங்கீகரித்த முதல் நாடு என்ற சிறப்பை தைவான் பெற்றுள்ளது. (ம)



தைவானில்தன்பால்திருமணத்துக்குசட்ட அங்கீகாரம்கிடைத்துள்ளநிலையில், அதைவரவேற்றுதன்பால் ஈர்ப்பாளர்கள் அங்கு நேற்றுமுன்தினம் பேரணியில் ஈடுபட்டனர். (ம)



## 8 ஆண்டுகளின் பின்னர்
# ஈராக்-சிரியா இடையே வானூர்திச்சேவைகள்

ஈராக், சிரிய நாடுகளுக்கு இடையில் கைவிடப்பட்டிருந்த வானூர்திச் சேவைகள் மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

ஈராக், சிரியநாடுகளைக்கைப்பற்றி அவற்றைஒருதனிநாடுஎன்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிரான போர் இரண்டு நாடுகளிலும் தீவிரமாக இடம்பெற்று வந்தது. சிரியாவில் அந்த நாட்டு அதிபர் அல் அசாத்துக்கு எதிரான போரும் இடம்பெற்று வந்தது. இதனால் சிரியா, ஈராக் நாடுகளுக்கு இடையிலான வானூர்திச் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது இரண்டு நாடுகளிலும் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் மீண்டும் வானூர்திச் சேவைகளை ஆரம்பிக்க இரண்டுநாடுகளும் திட்டமிட்டுள்ளது.

முதல்கட்டமாக சிரியத் தலைநகர் டமஸ்கஸ், ஈராக்கியத் தலைநகர் பக்தாத் ஆகியவற்றுக்கு இடையில்வாரம்ஒருவானூர்தி இயக்கப்படவுள்ளது. (ம)

# இன்றைய நாள்

**மேடம்:** முன்பு பெற்ற உதவிக்கு நன்றி செலுத்துவீர்கள். உறவினர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார நடைமுறையில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** முன்பு பெற்ற உதவிக்கு நன்றி செலுத்துவீர்கள். உறவினர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபார நடைமுறையில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். பணியை எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்திவிற்பனைஅபிவிருத்தியாகும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கடகம்:** இஷ்ட தெய்வத்தின் கருணையால் சில நன்மைகள் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை இருக்கும். சிக்கனமாக செலவு செய்வது நல்லது. தியானம் தெய்வ வழிபாடு நிம்மதியை தரும்.

**சிம்மம்:** உங்களின் பொறுப்பான செயல் தவறாக விமர்சிக்கப்படலாம். சக தொழில் வியாபாரம் சார்ந்தவர்களுடன் சச்சரவு பேச வேண்டாம். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** குடும்ப உறுப்பினர்கள் அதிக பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு. பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

**துலாம்:** பிறர் செயலை குறை சொல்ல வேண்டாம். ஆரவாரம் தவிர்ப்பதால் பணி சரியாக நிறைவேறும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நல்ல செயலுக்கு உரிய நற்பலன் தேடி வரும். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதாக நிறைவேறும்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேசக்கூடாது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகலாம். நிர்ப்பந்தத்தின் பேரில் பொருட்கள்விலைக்குவாங்கவேண்டாம்.

**மகரம்:** கடந்த நாட்களில் இடையூறாக செயல்பட்டவர் விலகிப் போவார். தொழில், வியாபாரம் அபரிமிதமான முன்னேற்றம்பெறும். ஆதாய பணவரவு கிடைக்கும்.


**கும்பம்:** உங்களின் தனித்திறமையை நன்கு வெளிப்படுத்துவீர்கள். தாமதமான பணிஎளிதாகநிறைவேறும். பணியாளர்கள்பணிச்சுமையைதிறம்படசமாளிப்பர்.

**மீனம்:** பெரியவர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வீர்கள். திட்டமிட்ட பணிகளின் மூலம் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில்சராசரி வளர்ச்சி இருக்கும்.

## சீனாவுக்கு இரகசியங்களை விற்ற

# அமெரிக்க உளவாளிக்கு 20 ஆண்டுகளுக்கு சிறை

வோஷிங்டன், மே 20
சீனாவுக்கு இரகசியங்களை விற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட அமெரிக்க உளவாளிக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
அமெரிக்காவின் வெர்ஜினீயாவில் உள்ள லீஸ்பர்க் நகரை சேர்ந்தவர் கெவின் பி.மல்லோரி (வயது 62). இராணுவச் சிப்பாயான இவர் அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனத்தில் (சி.ஐ.ஏ.) கடந்த 2012ஆம் ஆண்டு வரை உளவாளியாக பணிபுரிந்தார்.
அதன் பின்னர் இவர் வர்த்தக ஆலோசகராக பணிபுரிந்து வந்தார். 5 ஆண்டுகளுக்கு பிறகு இவரது வியாபாரத்தில் கடும் நஷ்டம் ஏற்பட்டது.


கெவின் பி.மல்லோரி


அதன்பின்னர் இவர் ஒரு சீன இணையதள நிறுவனத்துடன் தன்னை இணைத்துக்கொண்டார். நாளடைவில் அமெரிக்காவில் இருந்து கொண்டே சீனாவுக்கு உளவு வேலை பார்த்தார். 2 தடவைகள் சீனாவுக்குச் சென்று வந்த அவர் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலம் சீன அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார். அமெரிக்க ராணுவத்தின் மிக உயரிய ரகசியங்களை சீனாவுக்கு விற்பனை செய்தார். அதை தொடர்ந்து கைது செய்யப்பட்ட இவர் மீது வழக்கு தொடரப்பட்டது. விசாரணையில் குற்றம் உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ம)



## அன்னையின் சாவு காயப்படுத்தியது!

### டயானாவின் இறப்புத் தொடர்பில் மௌனம் கலைத்தார் வில்லியம்

லண்டன், மே 20
தன் அன்னையின் சாவு அதிகம் காயப்படுத்தியது என்று தெரிவித்தார் பிரிட்டன் இளவரசி டயானாவின் ம கனான வில்லியம்.
இங்கிலாந்து இளவரசி டயானா, தனது 36ஆவது வயதில் 1997ஆம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி பிரான்ஸ் தலைநகர் பரீசில் நடந்த விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். ஒட்டுமொத்த மனித குலத்தின் அன்பை ஒருசேரப் பெற்றிருந்த அவரது சாவு, உலக வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாக அமைந்தது.
இளவரசர் சார்லஸ்சை பிரிந்து வாழ்ந்த நிலையில் அவர் இறந்தது பல்வேறு சர்ச்சைகளை அப்போது கிளப்பியது. சார்லஸ் -டயானா தம்பதியின் மகன்களான இளவரசர்கள் வில்லியமும், ஹாரியும் தங்கள் தாயின் சாவு குறித்து வெளிப்படையாக இது வரை பேசியது இல்லை.
இந்த நிலையில் தற்போது பி.பி.சி. தயாரித்துள்ள மனநலம் பற்றிய ஆவணப்படத்தில் இளவரசர் வில்லியம் மனம் திறந்து பேசி உள்ளார்.
அதில் அவர், "என் அம்மா டயானா இறந்தபோது பிற எந்த வலியை விடவும் கொடிய மன வலியை அனுபவித்தேன்.
கடினமான தருணங்களில் இங்கிலாந்து மரபுப்படி வாய் திறந்து பேசுவதில்லை. சற்று அதில் இருந்து வெளியே வர வேண்டும் அல்லவா? நாம் ஒன்றும் ரோபோக்கள் இல்லை. வாய் திறந்து நமது உணர்வுகளை சொல்லித்தானே ஆகவேண்டி இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார். (ம)



## 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனையானது மொனெட் வரைந்த ஓவியம்

பரிஸ், மே 20
பிரான்ஸ் நாட்டை சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் கிளாட் மொனெட் வரைந்த வைக்கோல் ஓவியம் இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.
பிரான்ஸ் நாட்டை சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் கிளாட் மொனெட். அந்த நாட்டின் நார்மண்டி பிராந்தியத்தில் வசித்து வந்த இவர் கடந்த 1890ஆம் ஆண்டு, கிராமப்புற வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் வைக்கோல் போரை ஓவியமாக தீட்டினார்.
கிளாட் மொனெட் வரைந்த ஓவியங்களில் மிகவும் தனித்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படும் இந்த ஓவியம் வெவ்வேறு நாடுகளில் ஏலத்தில் விடப்பட்டு, பல கோடி ரூபாய்க்கு விற்பனையாகி இருக்கிறது.
இந்த நிலையில், அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள சோத்பி ஏல நிறுவனம் கிளாட் மொனெட்டின் வைக்கோல் ஓவியத்தை அண்மையில் ஏலத்தில் விட்டது. ஏலம் தொடங்கிய 8 நிமிடங்களில் இந்த ஓவியம் இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. (ம)

## போயிங் வானூர்திகள் பறக்கத் தயார்நிலை

நியூயோர்க், மே 20
போயிங் நிறுவனத்தின் 737 மேக்ஸ் ரக வானூர்திகளில் அனைத்து மென்பொருள் அப்டேட்டுகளும் முடிந்ததாக அந்த நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
இந்தோனேசியாவில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் லயன் ஏர் வானூர்தி விபத்துக்குள்ளானது. இதில் 189 பேர் உயிரிழந்தனர். இதேபோல் கடந்த மாதம் எத்தியோபியன் ஏர் விமானம் விபத்துக்கு உள்ளானதில் 157 பேர் உயிரிழந்தனர். இந்த இரு வானூர்திகளும் 737 மேக்ஸ் ரக போயிங் வானூர்திகள் ஆகும். இவ்விரு விபத்துகளும் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இதையடுத்து உலக நாடுகள் அனைத்தும் இந்த 737 மேக்ஸ் ரக வானூர்திகளை தரை இறக்கின.
இந்த விபத்துகளுக்கு வானூர்திகளைக் கையாளும் அமைப்புப் பழுதானதே காரணம் எனக் கண்டறியப்பட்டது. இதனால் 737 மேக்ஸ் ரக வானூர்திகளை அப்டேட் செய்ய பல முயற்சிகளை போயிங் நிறுவனம் மேற்கொண்டது.
தற்போது 737 மேக்ஸ் ரக வானூர்திகளில் அனைத்து மென்பொருள் அப்டேட்டுகளும் முடிந்துள்ளதாக போயிங் நிறுவனம் அறிவித்துள்ளது. வானூர்திகள் மீண்டும் சேவைக்கு செல்லும் முன் அமெரிக்க மற்றும் பன்னாட்டு வானூர்தி கட்டுப்பாட்டாளர்களிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும். (ம)

## இலண்டன் மருத்துவர்களால் கருவுக்கு அறுவைச்சிகிச்சை

லண்டன், மே 20
லண்டன் மருத்துவர்களால் கருவுக்கு மேற்கொள்ளப்பட்ட முதுகெலும்பு அறுவைச் சிகிச்சை வெற்றியளித்துள்ளது. கருவைச் சுமந்த தாய் குறித்த குழந்தையை முழு ஆரோக்கியத்துடன் பிரசவித்தார்.
லண்டனில் உள்ள மேற்கு சாசெக்ஸ் பகுதியில் வசிப்பவர் ஷெர்ரி ஷார்ப் (வயது 29). திருமணமான இவர், கருவுற்று 20 வாரங்கள் கழித்து வழக்கமான பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு சென்றுள்ளார். லண்டனில் புகழ்பெற்ற கிங்ஸ் மருத்துவ கல்லூரி மருத்துவர்கள், கருவில் குழந்தையை பரிசோதித்துப் பார்க்கும்போது முதுகெலும்பு சீராக இல்லை என்பதைக் கண்டறிந்து மேற்படி அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளனர். (ம)


காசா எல்லையில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் அண்மைக்காலமாக முறுகல்நிலை ஏற்பட்டுள்ள நிலையில், பலஸ்தீனத்தை நோக்கி நீண்டுகொண்டிருக்கிறது இஸ்ரேலியச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி முனை. ரொயிட்டர்ஸ் இந்தப்படத்தை வெளியிட்டுள்ளது. (ம)

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## தயாசிறி கூறுகின்றார்

கொழும்பு, மே 20

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான வன்முறைச் சம்பவங்களுக்கும் தயாசிறி ஜயசேகரவுக்கும் இடையில் தொடர்புள்ளது என்று ரஞ்சன் ராமநாயக்க தமது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்முறைச் சம்பவங்களின்போது பொலிஸாருக்கும் கலகக்காரர்களுக்கும் இடையே ஏற்பட இருந்த மோதலை நான் தடுத்து நிறுத்தினேன்.

இதற்காகவே நான் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தேன். பொலிஸாரின் தீர்மானத்துக்கமைய சந்தேக நபர்களுக்குப் பிணையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தேன். இதனைத் திரிபுபடுத்தி ரஞ்சன் ராமநாயக்க என் மீது குற்றம் சுமத்தியமைக்கு நீதிமன்றத்தின் ஊடாக நியாயத்தைப் பெற்றுக்கொள்ளவுள்ளேன் - என்றார்.

தயாசிறி ஜயசேகர மீதான குற்றச்சாட்டு தொடர்பில், கொழும்பு பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் அவரிடம் மூன்றரை மணிநேர விசாரணை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,22)

# வெசாக்கூடுகளுக்கு பொலிஸ் மறுப்பு

## எரியூட்டிய இளைஞர்கள்

புத்தளம், மே 20

புத்தளம், சாலியவெள பிரதேசத்தில் இளைஞர் குழுவால் தயாரிக்கப்பட்டிருந்த வெசாக்கூடுகளை காட்சிப்படுத்துவதற்கு பொலிஸார் அனுமதியளிக்காமையால், வெசாக்கூடுகளை இளைஞர்கள் தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

சாலியவெள பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை பௌத்த மற்றும் கத்தோலிக்க இளைஞர்கள் இணைந்து 500 வெசாக்கூடுகள் அடங்கிய தொகுதியொன்றை தயார் செய்திருந்தனர். அவற்றில் ஒருபுறம் பௌத்தர்களின் சின்னமும் மறுபுறம் கத்தோலிக்கர்களின் சிலுவை சின்னமும் பொறிக்கப்பட்டமையால் அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து வெசாக்கூடுகளை காட்சிப்படுத்துவதற்கு பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து இளைஞர்கள், தாம் தயாரித்த வெசாக்கூடுகளை வீதியில் தீயிட்டு கொளுத்தியுள்ளனர். (ஒ.5)

## தொடருந்து ...

கொண்டிருந்தபோது, தொடருந்து முன்பாக அவர் பாய்ந்து உயிரிழந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ஒ.5)

## அதிவேகத்தால்...

யாழ்ப்பாணம், மே 20

மண்டைதீவுச் சந்திக்கு அண்மையாக, ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் இடம்பெற்ற மகிழுந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

உயிரிழந்தவர் கொக்குவிலைச் சேர்ந்த 33 வயதான முருகையா முகுந்தராஜ். காயமடைந்தவர்கள் தென்பகுதியைச் சேர்ந்த கடற்படையினர். சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் மண்டைதீவு சந்திக்கு அண்மையாக வளைவு உள்ளது. அந்த வளைவில், யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மகிழுந்து எதிர்த் திசைக்குப் பாய்ந்து, வீதியின் கரையிலிருந்த கம்பங்களை மோதித் தூக்கி எறிந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் கடல் பகுதியை அண்மித்த சதுப்பு நிலத்தில் வீழ்ந்தது என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். அதிவேகமாக மகிழுந்து வளைவில் திரும்பியதே விபத்துக்கு காரணம் என்று முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விடுமுறையில் ஊருக்குச் செல்வதற்காக காத்திருந்த கடற்படையினரே மகிழுந்தில் ஏறி வந்ததாகத் தெரிவித்த பொலிஸார் அவர்கள் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டனர். (ஒ.5,21,105)

## இலங்கையின்...

ருந்து எதிர்க்கட்சித் தலைவர் சிறப்பு உரையை நேற்று நிகழ்த்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில நாடுகள் போரை நிறுத்துமாறு விடுத்த அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே நாம் புலிப் பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுத்த போராட்டத்தை வெற்றிகொண்டோம். நாம் நேரடியாகவே நிராகரித்ததன் காரணமாகவே அது சாத்தியமானது. அமெரிக்காவின் குடியரசுக் கட்சியால் எமக்கு பல உதவிகள் கிடைத்தன. அதனை கூற வேண்டும். அமெரிக்கா உதவியதன் காரணமாகவே, 2006ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தினூடாக புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க முடிந்தது.

அமெரிக்காவால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட தகவலின் காரணகமாகவே, 2007இல் புலிகள் அமைப்பின் ஆயுதக் கப்பலை ஆஸ்திரேலியா, இந்தோனிசியாவுக்கு அண்மித்த கடற்பரப்பில் எம்மால் அழிக்க முடிந்தது. எனினும், 2009 பெப்ரவரி மாதத்திலிருந்து அமெரிக்காவில் புதிய அரச தலைவர் நியமிக்கப்பட்டார். அதன்போது அவர்களின் எண்ணக்கரு மாற்றமடைந்தது.

நாம் பன்னாட்டு அச்சுறுத்தல்களைக் கருத்தில்கொள்ளாது போரை முடிவுக்குக் கொண்டுவந்தோம். இலங்கையில் போர் முடிந்ததன் பின்னர் இந்நாட்டில் அமைதி உருவாவதற்கு பன்னாட்டு மற்றும் உள்நாட்டு சக்திகள் இடமளிக்கவில்லை. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நாளிலிருந்து கடந்த காலத்தை நினைவூட்டி, எவ்வகையிலேனும் மோதலைப் பேணுவதையே அவர்கள் முன்னெடுத்தனர். தம்மை செவிமடுக்காது போரை முடிவுக்குக் கொண்டுவந்ததாக பிரச்சினையை ஏற்படுத்தினர். சீனா எமக்கு உதவுகின்றது என்பதும் அவர்களுக்கு பிரச்சினையாக இருந்தது.

இதேவேளை தமிழ் மொழியில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச, அன்பர்களே! நண்பர்களே! வணக்கம் சலாம் அழைக்கும் பத்து வருடத்துக்கு முன் இந்த தேசத்தில் நாம் சமாதானத்தை ஏற்படுத்தினோம். ஆனால் இன்று அது சிதறி உள்ளது. எனக்கும் மனவேதனையாக உள்ளது. உங்களுக்கு என்மீது வருத்தம் இருக்கலாம். ஆனால் உங்கள் வாழ்வில் அரச தலைவராக நான் செய்த சேவை உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

நிம்மதியான எமது தாய்நாட்டை ஐந்து வருடங்களுக்கு முன்னால் நாம் பாரம்கொடுத்தோம். அனைத்து தலைவர்களும் ஒன்றுசேர்ந்துதான் என்னிடமிருந்து பொறுப்பு எடுத்தார்கள். தமிழ்பேசும் மக்களுக்கு சேவை செய்ய என்னோடு சேராத அவர்கள் இந்த அரசுக்கு ஆதரவு கொடுத்தார்கள். இன்றைய அரசின் செயற்பாடுகளுக்கு அவர்களும் பங்காளிகள்தான். இங்கு வாழும் எல்லா மக்களும் நிம்மதியாக வாழவேண்டும். சந்தோசமாக வாழவேண்டும். அந்த நாளை உருவாக்க மீண்டும் நான் பாடுபடுவேன். இது நிச்சயம். நான் சொல்வதை செய்பவன். செய்வதை சொல்பவன், நாளை நமதே வணக்கம் சலாம் அழைக்கும் - என்றார். (ஒ.5)

# ஒரு நிமிடம் அகவணக்கம்

***குண்டுத் தாக்குதல் நினைவாக நாளை கடைபிடிக்க ஆளுநர் கோரிக்கை***

யாழ்ப்பாணம், மே 20

இலங்கையில் பல பாகங்களிலும் கடந்த மாதம் 21ஆம் திகதி ஈஸ்ரர் தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களின் ஒரு மாத நிறைவை நினைவுகூரும் முகமாக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8:45 மணிக்கு வடமாகாணத்தின் அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களிலும் மணியோசை ஒலிக்கச் செய்வதுடன் ஒரு நிமிட அக வணக்கத்தையும் மேற்கொள்ளுமாறு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வடமாகாணத்தின் அனைத்து சமயத் தலைவர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார். அந்தத் தருணத்தில் வடமாகாணத்தின் அனைத்து மக்களையும் இணைந்து கொள்ளுமாறும் ஆளுநர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ.5,7)

## பொறுப்புக்...

இலங்கையில் போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

26 ஆண்டுகளாக நீடித்து வந்த போர் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப் போரின் போதும் அதற்கு முன்னரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். போர் நாடு முழுவதிலும் ஆறாக் காயங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலமாக போரில் பாதிக்கப்பட்ட தமிழ் கனேடியர்கள் பலரை நான் தனிப்பட்ட ரீதியில் சந்தித்துள்ளேன். அவர்களின் வலிகள் வேதனைகளை கேட்டறிந்து கொண்டுள்ளேன்.

தமிழ்க் கனேடியர்களுடான சந்திப்புக்களின் ஊடாக இலங்கையில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவது மிக நீண்ட பயணம் என்பதனை புரிந்து கொண்டேன்.

போர் காரணமாக சொந்தங்களை இழந்த, பல்வேறு வழிகளில் இழப்புக்களை எதிர்நோக்கிய மற்றும் பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் கனேடிய அரசு சார்பில் ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தத்தையும் வெளியிட்டுக் கொள்கின்றேன்.

அண்மையில் உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து மக்களும் தங்களது நம்பிக்கைகளின் ஊடாக வழிபாடுகளில் ஈடுபடக்கூடிய சுதந்திரம் இருக்க வேண்டும். கனடாவின் வளர்ச்சிக்கு தமிழ் கனேடியர்கள் வழங்கி வரும் பங்களிப்புக்களை அனைத்து கனேடியர்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும் - என்றார். (ஒ.5)

## நாடாளுமன்ற...

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகலில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவருடன் மேலும் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஒ.5)

## இலங்கையில்...

நடத்தப்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இந்த நிலமையை வழமைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, இலங்கை கணினி அவசரப்பிரிவின் மூத்த தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் ரவிந்து மீகஸ்முல்ல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சைபர் தாக்குதல் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (ஒ.5)

## நீர் கொழும்பிலிருந்த...

தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து இலங்கைக்கு வந்த ஏதிலிகள், நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி தற்கொலைக் குண்டுவெடிப்புக்களையடுத்து, ஏதிலிகள் நீர்கொழும்பிலிருந்து விரட்டப்பட்டனர். அவர்கள் பொலிஸ் நிலையத்திலும், தற்காலிக இருப்பிடங்களிலும் சிரமங்களுக்கு மத்தியில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களை வடக்குக்கு அழைத்து வந்து தங்க வைப்பதற்கு அரசு முயற்சிகளை முன்னெடுத்திருந்தது. இதற்கு உள்ளூரில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை வெளிநாட்டு ஏதிலிகள் வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் அங்கு மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்துக்கு வெளிநாட்டு ஏதிலிகள் நேற்று அழைத்து வரப்பட்டுள்ளனர். முதல் கட்டமாக ஒரு குடும்பம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்துள்ளன. அவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ.5,105)

## இந்திய...

போனது. பல்வேறு ஆக்கிரமிப்புகளை எதிர்கொண்ட எமது இராணுவம் இறுதியாக வெற்றி இலக்கை அடைந்தது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

'இராணுவத்தினரின் அர்ப்பணிப்பை நினைவுகூரும்' பத்தாண்டு பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அரச தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

தாய் நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவும் நாட்டின் ஆள்புல எல்லையை பாதுகாப்பதற்காகவும் உயிர்த் தியாகம் செய்த, காணாமல்போன மற்றும் அங்கவீனமுற்ற இராணுவத்தினரை நினைவுகூர்ந்து சிறி ஜயவர்தனபுர நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியின் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய இராணுவ நினைவுத் தூபி முன்னிலையில் நினைவு தின கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

இங்கு அரச தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினரின் சிறப்பும் அர்ப்பணிப்பும் உயிர் தியாகமுமே அனைத்து சந்தர்ப்பங்களிலும் தாய் நாட்டை பாதுகாத்துள்ளது. இன்று நாடு முகம்கொடுத்திருக்கும் பயங்கரவாத சவாலை இலங்கையிலிருந்து முற்றாக ஒழித்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்குரிய ஆற்றல் எமது இராணுவத்தினரிடம் காணப்படுகின்றது.

முப்பது வருடகால கொடிய பயங்கரவாதத்துக்கு எதிரான போர் வெற்றியை அடைந்து பத்து வருடங்கள் நிறைவு பெறும் இந்தச் சந்தர்ப்பத்தில், அதற்கு முற்றிலும் வேறுபட்ட பன்னாட்டுப் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிர்பாராத வகையில் முகம்கொடுக்க நேர்ந்துள்ளதாக அரச தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக முப்படையினர், புலனாய்வு பிரிவினர் மற்றும் பாதுகாப்புத்துறை நிபுணர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் புதியதொரு பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. கடந்த முப்பது ஆண்டு கால போர் அனுபவங்களை பயன்படுத்தி புதிய பயங்கரவாத சவாலை நிச்சயமாக வெற்றிக்கொள்வதற்கான ஆற்றல் அனைவருக்கும் உள்ளது - என்றார். (ஒ.5)

# அஞ்சலோட்ட போட்டியில் தெல்லிப்பழை சாதித்தது




யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தது.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தது.

சாவகச்சேரி பிரதேச செயலக அணி வெள்ளிப் பதக்கத்தையும், நல்லூர் பிரதேச செயலக அணி வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தன. (ம-422-108)




## ஆண்களுக்கான உயரம்பாய்தலில் ஜதுர்சனுக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 20

ஆண்களுக்கான உயரம் பாய்தலில் தங்கப்பதக்கம் வென்றார் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். ஜதுர்சன்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளப்போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றன.

ஆண்கள் பிரிவு உயரம்பாய்தலில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எஸ்.ஜதுர்சன் 1.88 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.ஜீனோஸ் 1.85 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஜிதுசன் 1.80 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப்பதக்கத்தையும் பெற்றனர். (ம-108)



## நீளம் பாய்தல் போட்டியில் தர்மிகா வென்றார் தங்கம்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான நீளம் பாய்தலில் உடுவில் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த தர்மிகா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான நீளம் பாய்தலில் உடுவில் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த கே.தர்மிகா 4.74 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், நல்லூர் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.சகானா 4.69 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைப் பிரதி நிதித்துவம் செய்த கே.நிரோசினி 4.41 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (ம-422)




## ஆண்கள் பிரிவு குண்டெறிதலில் நிமலேந்திரா வென்றார் தங்கம்!

கரணவாய், மே 20

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு குண்டு போடுதலில் கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இ.நிமலேந்திரா தங்கப்பதக்கம் வென்றார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளப்போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. ஆண்களுக்கான குண்டு போடுதலில் 13.26 மீற்றர் தூரம் எறிந்து கரவெட்டிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இ.நிமலேந்திரா தங்கத்தையும், 11.68 மீற்றர் தூரம் எறிந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் வெள்ளியையும், 11.34 மீற்றர் தூரம் எறிந்து நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.வாகீசன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (ம-108)

## சரஸ்வதி பி அணி இறுதிக்குத் தகுதி

அரியாலை சன சமூக நிலையத்தின் 59ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அரியாலை சரஸ்வதி பி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

அண்மையில் நடைபெற்ற ஆட்டத்தில் அரியாலை சரஸ்வதி பி அணியை எதிர்த்து அரியாலை திருமகள் ஏ அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சரஸ்வதி பி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பில் அதிகபட்சமாக சத்தியேந்திரா 25 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் திருமகள் பி அணி சார்பில் கோகுலன் 2 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருமகள் பி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் அரியாலை சரஸ்வதி பி அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. திருமகள் ஏ அணி சார்பாக நிரூபன் 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அரியாலை சரஸ்வதி பி அணி சார்பில் சத்தியேந்திரா 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-422)

## தட்டெறிதலில் பிரகாஷ்ராஜ் தங்கத்தைத் தனதாக்கினார்

யாழ்ப்பாண்ம், மே 20

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு தட்டெறிதலில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பிரகாஷ்ராஜ் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பிரகாஷ்ராஜ் 39.01 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் எஸ்.மிதுன்ராஜ் 34.19 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் கரவெட்டி பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்து வம் செய்த ஆர்.நிமலேந்திரா 33.99 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (ம-422)




## பெண்கள் பிரிவு 10,000 மீற்றர் வினுசாவுக்குத் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எல்.மேரி வினுசா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எல்.மேரி வினுசா தங்கப் பதக்கத்தையும், சி.சியானா வெள்ளிப் பதக்கத்தையும், சாவகச்சேரி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜெ.சோபனா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)




# உலகக்கிண்ணத் தொடரில் மின்னப்போகும் மின்னல்கள்

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இரு புதிய பந்துகள் பயன்படுத்தப்பட்ட பிறகு ஆட்டம் பெரும்பாலும் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாகவே மாறிவிட்டது. இரு பந்துவீச்சு முனையிலும் இரு புதிய பந்துகள் பயன்படுத்தப்படுவதால் 1990 காலக்கட்டங்களில் பெரிய ஆயுதமாக வேகப்பந்து வீச்சாளர்களால் பயன்படுத்தப்பட்ட ரிவர்ஸ் ஸ்விங் கலையை தற்போது காண்பது அரிதாகிவிட்டது. இதன் விளைவு தான் கடந்த சில ஆண்டுகளாக ஒருநாள் போட்டியில் சர்வசாதாரணமாக 300க்கும் மேற்பட்ட ஓட்டங்கள் குவிக்கப்படுவதை கண்கூடாக காண்கிறோம். இங்கிலாந்தில் நடைபெற உள்ள உலகக் கோப்பை தொடரிலும் அதிக அளவில் ஓட்டங்கள் வேட்டையாடப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் அங்கு நிலவும் வெப்பமான காலநிலை, உலர்ந்த ஆடுகளங்கள் உள்ளிட்ட காரணிகள் வேகப் பந்து வீச்சாளர்களின் பணியை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்க காத்திருக்கின்றன. இந்த நிலையில் இந்த சவால்களை முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா, தென்னாபிரிக்காவின் காகிசோ ரபாடா, ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க், நியூசிலாந்தின் டிரென்ட் போல்ட், பாகிஸ்தானின் ஹசன் அலி ஆகியோர் எப்படி எதிர்கொள்ள போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இவர்களை பற்றிய ஓர் அலசல்.




**பும்ரா**

ஐசிசியின் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தரவரிசையில் முதலிடம் வகிக்கும் ஜஸ்பிரித் பும்ரா, உலகக் கோப்பை தொடரில் இந்திய அணியின் துருப்பு சீட்டாக இருக்கக்கூடும். இறுதிகட்ட பந்துப்பரிமாற்றங்களில் அபார திறனை வெளிப்படுத்தும் பும்ராவின் உயர்மட்ட செயல்திறன் 3ஆவது முறையாக இந்திய அணி சாம்பியன் பட்டம் வெல்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யக்கூடும். வழக்கத்துக்கு மாறான பந்து வீச்சு பாணி, சீரான வேகத்துடன் பந்தை பவுன்ஸ் செய்வது ஆகியவற்றின் மூலம் துடுப்பாட்ட வீரர்களைக் கட்டுப்படுத்துவதில் பும்ரா கைதேர்ந்தவர்.

**மிட்செல் ஸ்டார்க்**

இடது கை பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டார்க். கடந்த முறை சொந்த மண்ணில் ஆஸ்திரேலிய அணி சம்பியன் பட்டம் வென்றதில் முக்கிய பங்கு வகித்திருந்தார். தொடர் நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், 22 இலக்குகளை வேட்டையாடியிருந்தார். ஆனால் அதன் பின்னர் கடந்த 4 வருடங்களில் அதிக முறை காயங்களால் அவதிக்குள்ளானார். இதனால் தனது சீரான வேகத்தை இழந்த மிட்செல் ஸ்டார்க், எதிரணியின் வீரர்களை மிரட்டக்கூடிய வகையிலான திறனையும் பறிகொடுத்துள்ளார். எனினும் உலகக்கிண்ணத் தொடர் என்பதால் மிட்செல் ஸ்டார்க்கிடம் இருந்து உயர்மட்ட செயல்திறன் வெளிப்படக்கூடும் என ஆஸ்திரேலிய அணி நிர்வாகம் நம்பிக்கை கொண்டுள்ளது.

**டிரென்ட் போல்ட்**

இடது கை பந்து வீச்சாளரான டிரென்ட் போல்ட் கடந்த பல வருடங்களாக நியூசிலாந்து அணியின் முன்னணி பந்து வீச்சாளராக வலம் வருகிறார். கடந்த உலகக் கோப்பையில் 22 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தியிருந்தார். கட்டுப்பாட்டுடனும், துல்லியமாகவும் பந்து வீசுவதே டிரென் போல்டின் பலம். 29 வயதான அவர், சமீபகாலமாக சிறந்த திறனில் இல்லை. எனினும் உலகக் கோப்பை தொடரில் மீண்டும் திறனுக்குத் திரும்பி வேகப்பந்து வீச்சு துறையை சிறப்பாக வழிநடத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ரபாடா**

ஐசிசி தரவரிசையில் காகிசோ ரபாடா 5ஆவது இடம் வகிக்கிறார். 2015 ஆம் ஆண்டு பன்னாட்டுக் கிரிக்கெட்டில் அறிமுகமான ரபாடா, பந்து வீச்சில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர். எந்த விதமான ஆடுகளமாக இருந்தாலும், ஆட்டத்தின் எந்த தருணத்திலும் விக்கெட் வீழ்த்தும் திறன் கொண்டவர். அவரது பலமே சீரான வேகத்துடன் பந்தை ஸ்விங் செய்வதுதான்.

**ஹசன் அலி**

2017ஆம் ஆண்டு நடை பெற்ற ஐசிசி சம்பியன்ஸ் கிண்ணத்தை பாகிஸ்தான் அணி வென்றதில், ஹசன் அலி முக்கிய பங்கு வகித்திருந்தார். 13 விக்கெட்கள் வீழ்த்திய அவர், தொடர் நாயகனாகவும் தேர்வாகியிருந்தார். 145 கி.மீ. வேகத்தில் பந்து வீசும் திறன் கொண்ட ஹசன் அலி, மீண்டும் உயர்மட்ட செயல்திறனை வெளிப்படுத்தும் பட்சத்தில் பாகிஸ்தான் அணி 2ஆவது முறையாக கோப்பையை வெல்வதற்கான வாய்ப்பு உருவாகக்கூடும் என அணி நிர்வாகம் கருதுகிறது.



*உலகக்கிண்ணத் தொடரில்*

# ஆஸி. மீண்டும் சம்பியனாகும்!

## கம்பீர் கணிப்பு

இங்கிலாந்தில் எதிர்வரும் 30ஆம் திகதி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணி கிண்ணம் வெல்லும் என்று கணித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் கம்பீர்.

இது தொடர்பில் கம்பீர் மேலும் தெரிவித்ததாவது:

என்னை பொறுத்தவரை இந்த உலகக்கோப்பையையும் ஆஸ்திரேலியாவே வெல்ல வாய்ப்பு உள்ளது. அந்த அணி நிச்சயமாக இறுதிப் போட்டிக்கு நுழையும். உலகக்கோப்பையை வெல்ல அடுத்து வாய்ப்பு உள்ள அணிகளில் இங்கிலாந்து, இந்தியா உள்ளன.

இந்திய அணியை பொறுத்தவரை துடுப்பாட்டம் பலம் பெற்று இருக்கிறது. ரோகித், கோக்லியின் ஆட்டத்தை பொறுத்து மிகப்பெரிய இலக்கைக் குவிக்கும். பந்துவீச்சில் பும்ரா துருப்புச் சீட்டாக இருப்பார். இந்த உலகக்கோப்பை போட்டி முறை சுவாரசியமானது. ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு ஆட்டமும் முக்கியத்துவம் பெற்றது.

உலகக்கோப்பையை வெல்ல இரண்டாவது வாய்ப்பாக இங்கிலாந்தை நான் கூறுவதற்கு சொந்த மண்ணில் விளையாடுவதால் அல்ல. அந்த அணியில் எல்லா வரிசையிலும் ஆடக்கூடிய திறமை வாய்ந்த வீரர்கள் உள்ளனர். அந்த அணி சமபலத்துடன் திகழ்கிறது.

2011 உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் நான் சதத்தை தவற விட்டதாக வருத்தப்படவில்லை. எங்களது ஒரே இலக்கு உலகக் கோப்பையை வெல்வதே. எனது பங்களிப்பு மிகப்பெரிய அளவில் இருக்க வேண்டும் என்று விரும்பினேன். 97 ஓட்டங்கள் என்பது அணிக்கு முக்கியமானது- என்றார்.

கடந்த வருடம் மைக்கல் கிளார்க் தலைமையில் களமிறங்கி கிண்ணம் வென்ற ஆஸ்திரேலியா இந்த வருடம் ஆரோன் பின்ஞ் தலைமையில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்குகிறது. (ம)





# உலகக்கிண்ண தொடருக்கான பாடலை வெளியிட்டது ஐ.சி.சி.

இங்கிலாந்தில் எதிர்வரும் 30ஆம் திகதி உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தொடருக்கான பாடலை அதிகாரபூர்வமாக வெளியிட்டது ஐ.சி.சி. பிரபலமான தொடர்களின் போது அதற்கு பெருமை சேர்க்கும் வகையில் அதிகாரப்பூர்வமான பாடல்கள் வெளியிடப்படும். அதன்படி இந்த உலகக்கோப்பைக்கான பாடலை லாரின், ருடிமென்டல் பாடியுள்ளனர்.

இந்த பாடல் சமூக இணையதளத்தில் வெளியாகியுள்ளது. இதை ஐசிசி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. (ம)

## குணமடைந்தார் கேதர் யாதவ்

ஐ.பி.எல். தொடரில் காயமடைந்த இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் கேதர் யாதவ் குணமடைந்தார். இதனால் அவர் உலகக் கிண்ணத் தொடருக்கான அணியுடன் விரைவில் இணையவுள்ளார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சகலதுறை வீரரான கேதர் ஜாதவ், கடந்த 5ஆம் திகதி பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் பந்தைத் தடுக்க பாய்ந்து விழுந்த போது இடது தோள்பட்டையில் காயம் அடைந்தார். வலியால் அவதிப்பட்ட அவர் உடனடியாக வெளியேறினார். எஞ்சிய ஐ.பி.எல். ஆட்டங்களில் அவர் விளையாடவில்லை.

உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் கேதர் இடம் பெற்றிருந்தார். இதனால் அவர் விரைவில் நலம்பெறுவாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. ஏனெனில் ஒவ்வொரு கிரிக்கெட் சபையும் தாம் அறிவித்த அணி தொடர்பிலான இறுதி நிலைப்பாட்டை எதிர்வரும் 22ஆம் திகதிக்குள் உறுதிசெய்ய வேண்டும். இந்த நிலையில் கேதர் நலம்பெற்றார் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (ம)





# முத்தரப்பு தொடர் பங்களாதேஷிடம்

அயர்லாந்து, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் அயர்லாந்தில் நடைபெற்றது. இதில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்று சம்பியனை தனதாக்கியது.

மேற்கிந்தியத்தீவுகள் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் இறுதிப் போட்டி இடம்பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. 20.1 பந்துப்பரிமாற்றத்தில் அணி 131 ஓட்டங்கள பெற்ற நிலையில் மழை குறுக்கீட்டதால் ஆட்டம் 24 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டது.

மேலும் 23 பந்துகளை சந்தித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 21 ஓட்டங்களே பெற்றது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஓர் இலக்கை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி பங்களாதேஷ் அணிக்கு 24 பந்துப்பரிமாற்றங்களில் 210 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ண யிக்கப்பட்டது. அணி 22.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டிப் பிடித்தது. அணி சார்பில் சவுமியா சர்கார் 66 ஓட்டங்களையும், மொசாடெக் ஹொசைன் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் விளாசியி ருந்தனர். இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி முத்தரப்பு ஒருநாள் தொடரைக் கைப்பற்றியது.




## 1,500மீற்றர் ஓட்டத்தில் சுஜிகரனுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான 1, 500 மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சு.சுஜிகரன் தங்கப் பதக்கத்தைச் சுவீரித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 1, 500 மீற்றர் ஓட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை பிரதிநிதித்து வம் செய்த சு.சுஜிகரன் தங்கப் பதக்கத்தையும் மருதங்கேணி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்து வம் செய்த க.கர்ன்ராஜ் வெள்ளிப் பதக்கத்தையும் கரவெட்டி பிரதேச செயலகத்தை பிரதிநிதித்துவம் செய்த சி.சிவதர்சன் வெண்கலப் பதக்கத்தையும் சுவீ கரித்தனர். (ம-422-108)

## நடால் இறுதிக்குத் தகுதி

இத்தாலி பகிரங்கத் தொடரில் ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் இறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நடாலை எதிர்த்து சிட்சிபாஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்நது. முதலிரு செற்களையும் முறையே 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றார் நடால். (ம)



போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
தர்மாசிரியர் பரீட்சைக்கு
திங்கள் இன்று
9.00 - 3.00
செவ்.புதன்.வியாழன்
3.00 - 6.00
வருமானப் பரிசோதகர்
முகாமைத்துவ உதவியாளர்
செவ்.புதன்.வியாழன்
4.00 - 6.00
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புக்கள் பிரிவு
100 M தூரத்தில்
கிளிநொச்சியில்
எடிசன் கல்வி நிலையத்தில்
இப்பரீட்சைகளுக்கான
வகுப்புக்கள் மாலை நேரம்
நடைபெறவுள்ளன.
0766883394

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.